—Page – 261.

அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

மலர்: 14	சுபகிருது ௵ புரட்டாசி ௴	வருட சந்தா
இதழ்: 6	செப்டம்பர்-அக்டோபர் 1962	ரூ. 3-00

-261-
18583

மீனாட்சி அம்மையின் திருமணம்.

சித்திர விளக்கம் 6. பக்கம் 245

Acc. No. 18583.

உள்பொருள்

			பக்கம்
1.	ஷடாதார - பராபரம் (திருப்புகழ்மணி)	...	241
2.	மீனாக்ஷி திருமணம் (கி. வா. ஜகந்நாதன்)	...	245
3.	"ஐந்து பூதமு மாறு சமயமு" விராலிமலை திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ)	...	249
4.	அருள்விழா (அநுஷம்)	...	258
5.	குமாரஸ்தவ விளக்கம் (திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A.,B.T.)	...	262
6.	ஞான விநோதன் (கி. வா. ஜ.)	...	267
7.	தவவழியில் தெய்வத் தநயர்கள் (ரஸபதி)	...	273
8.	THE FLUTE (*Thiruppugal Mani*)	...	284

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 14.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா முப்பது ஷில்லிங்குகள், போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து, சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

குறிப்பு : முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3-50 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1.

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

மலர் 14	சுபகிருது௵ புரட்டாசிமீ செப்டம்பர்—அக்டோபர் 1962	இதழ் 6

ஷடாதார - பராபரம்

(திருப்புகழ் மணி)

ஆண்டவன் வஞ்சகருள்ளத்தில் தன் சரணத்தை ஊன்றிவைக்க மாட்டானாம். நான் என்ற ஆணவம் நிறைந்தவரே வஞ்சகர். அவன் தன் சரணத்தை வைக்கும் பொழுதே நான் என்ற ஆணவமாகிய பாசி வழுக்கிவிடுமாம். எல்லாருள்ளத்திலும் இறைவன் திருவடி யிருந்தாலும், வஞ்சகருள்ளம் அத்திருவடியைப் பற்றாது. ஆனால், உள்ளத்தால் ஒருமுறை ஆண்டவனைப் பற்றி விட்டால் அவன் விடவே மாட்டான். பக்தர்கள் தன்னைப் பிடித்த பிடியை அவன் நழுவவிடவே மாட்டான். அதனால், அவனுக்கு அச்சுதனென்று பெயர். கணபதியை நினைப்பவருக்குக் குற்றங்கள் ஒழிந்துவிடும். வேதத்தின் வித்தாயிருக்கும் கணபதியை அந்த வேதங்கள் கூட காணவில்லையாம். பரப்ரும்மம் ஞானமாயிருக்கிறது. ஞானம்

நயமாம் தமிழ்கற்றும், நாநயத்தை நீங்கிக்,
கயமை பழகல், கலிவலியின் பண்பேயோ ?

மற்றவற்றைக் காட்டும். ஆனால் ஞானத்தைப் பார்க்க முடியாது. கண்கள் எதிரிலுள்ள பொருள்களைக் காட்டுகின்றன. ருசியை அனுபவிக்கலாம். ஆனால் அதைப் பார்க்க முடியாதல்லவா?

ஞானமாயிருப்பதே ப்ரும்மசுவரூபம். அது தோன்றாத் துணையாயிருந்து உதவுகிறது. உலகில் தாயின் சொரூபம் எங்கும் நிறைந்திருக்கிறது. ப்ரும்மம் தாயின் முகமாகத்தான் அருள் புரிகிறது. தாயின் ப்ரேமை நிரம்பிவிட்டால் உலகில் வளர்ச்சி யிருக்காது. அத் தாயின் ப்ரேமை முதலில் கணபதி ரூபமாய் விளையாட நினைத்ததாம். உடனே கணபதி ரூபம் தோன்றியதாம். அந்த கணபதி பரங்கிரிவாழ் கற்பகமாம். பரம்கிரி என்பது என்ன?

ஆவதும் பரத்துளே, அழிவதும் பரத்துளே
போவதும் பரத்துளே, புகுவதும் பரத்துளே
தேவரும் பரத்துளே, திசைகளும் பரத்துளே
யாவரும் பரத்துளே, யானுமப் பரத்துளே.

என்றார் சித்தர். உலகில் இருக்கும் பொருள்களும் உலகும் சேர்ந்து எதில் அடங்கி யிருக்கிறதோ அது தான் பரமாம். அதுவே ஓம்காரம். அந்த ஓம்காரமாகிய பரமே மலைபோலிருக்கிறதாம். அதுவே பரங்கிரியாம். அந்த ஓங்காரத்திற்குள்ளும் வெளியிலும் சுற்றிச் சுற்றி விளையாடுகிறதாம். அதுதான் பரம்பொருளாகிய முருகனும். முருகன் சடாக்ஷரப் பொருளாம். “எழுகோடி மந்திரங்களுமுன் சடாக்ஷரத்துள்

ஆதி திருவுளத்தை, ஆய்ந்தறியாச் சில்லோர்தாம், 3
சாதிமத வேற்றுமையைச் சாடுவம்என் கின்றாரே.

அடக்கம்" என்ருர் கவிகுஞ்சர பாரதியார். அதாவது பரம்கிரியின் மேலும் உள்ளும் இருக்கும் பரமன் முருகனும். "ஷடார் ஷடாதரத்தின் மீதே பராபரத்தை நீ காண் என அனைச்சொல் அருள்வாயே" என்று முருகனை கேட்கிருர் அருணகிரியார்.

அந்த பரம்தான் எங்கும் திரண்டு மலைபோலிருக்கிறதாம். அந்த பரம்கிரியாகிய மலைக்குள் எல்லாம் அடக்கமாம். அதை நினைப்பது வேதமாம். உலகை முழுவதும் இருக்கப்பட்ட ஆத்மசாரம் அல்லது உயிர்ச்சத்தே பகவான். அவரை நினைத்து மனம் எனும் கருவியைத் திருப்பிவிட்டால் அவன் உளத்தில் ப்ரகாசிப்பானும். மனத்தை இறைவனுடைய நினைவில் ஒட்டவைப்பதுதான் தவம். "ஈசானும் சர்வ வித்யானும்" என்றது வேதம். உலகிலுள்ள கலைகளெல்லாம் ஈசனுகிய குத்து விளக்கிலிருந்து வருகிறதாம். ஈசனெனும் விளக்கே உலகில் ப்ரகாசிக்கும் சூரியனுக்கும் ஒளிதரும் பேரொளியாயிருக்கிறதாம். அதுதான் விடியாவிளக்கு. அந்த விளக்கைத் தன்னுள்ளே ஏற்றினர் ஒரு ஆழ்வார்.

அந்த விளக்கிற்கு அன்புதான் அகலாம். ஆர்வந்தான் நெய்யாம். சிந்தையே திரியாம். அந்தச் சிந்தையாம் திரியின்மேல் எரியும் விளக்குத்தான் ஞானத் தமிழ் விளக்காம். அதுவே நாராயணனும்.

மாசு மறுவற்ற மனத்தர் உபதேசம்,
நேச வுளத்தில், நிலைத்திருத்தல் புண்ணியமே

"அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா—நன்குருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்" என்றார்.

மற்றொரு ஆழ்வார் வெளியே விளக்கேற்றினார். அவர் உலகத்தையே அகலாகவும், கடலை நெய்யாகவும் சூரியனை விளக்காகவும் கொண்டார்.

"வையமே தகளியாக வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்கவே இன்று" என்றார் அவர்.

உள்ளும் புறமும் இவ்வாறு இருவிளக்கும் ஒளிர்ந்தால் பராபரம் காட்சியளிக்கும். அதுவே சிவம். சிவத்தை உள்ளே ஏற்றி விட்டாராம்.

அந்தச் சிவமாகிய இன்பவிளக்கு அகத்திலும், புறத்திலும் பரவி, அபாயத்தை உண்டாக்கிக் கொண்டிருந்த இருளை நீக்கிவிட்டதாம். உள்ளும் புறமும் அன்பாகிய சிவமெனும் விளக்குப் ப்ரகாசித்துக் கொண்டிருக்கிறதாம். அது அபாயமற்ற விளக்காம். (Safety matches). எல்லா உயிர்களிலும் ஈசனைப் பார்ப்பதே உலகத்தை அகலாகக் காண்பது.

(தொடரும்)

அன்பு வளர, அறிவுப்ர காசிக்கும்;
இன்ப ஒளியில், இறைசொருபம் உள்ளதுவே.

மீனாட்சி திருமணம்

[கி. வா. ஜகந்நாதன்.]

மீனாட்சியம்மை அறநெறி தவிராது பாண்டி நாட்டு அரசியாகிச் செங்கோல் ஓச்சி வந்தாள். அப்போது அப்பிராட்டிக்கு மணப்பருவம் வந்து எய்தியது. அதுகண்ட காஞ்சனமாலை, 'பருவம் வந்தும் இன்னும் திருமணம் செய்துகொள்ளாமல் இருக்கிறாளே' என்று வருந்தியபோது தடாதகைப் பிராட்டி, "ஆகும் பொழுது ஆகும்" என்று சொல்லிக் கை அமர்த்தினாள்.

பாண்டிய குலத்தில் வந்து முடிசூடி அரசு செலுத்திய அம்பிகைக்குத் திக்குவிசயம் செய்யவேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. படைத்தலைவர்களிடம் சொல்லி அதற்கு ஆவன செய்யச் செய்தாள். பெருங்கூட்டமாகப் படை எழுந்தது. எல்லோருக்கும் சக்தியை வழங்கும் அன்னையே போர் செய்யப் புறப்பட்டால் அவள் எதிரில் நிற்போர் யார்? பலர் பணிந்து வழிபட்டனர்; பலர் எதிர்த்து நின்று தோற்று ஓடினர். இந்த நாட்டு மன்னர்களை யெல்லாம் வென்றபிறகு அம்பிகை திக்குப் பாலகரை வெல்ல எண்ணிக் கீழ்த்திசை சென்று இந்திரனோடு பொருதாள். அவன் சிறிது போரிட்டு அப்பால் தன்னுடைய செல்வங்களை அங்கயற்கண் அம்மை திருவடியில் போட்டுவிட்டு ஓடிப்போனான். இப்படியே மற்றத் திசை காவலர்களையும் அன்னை வெற்றி கொண்டாள்.

பிறகு வடதிசையை நோக்கிச் சென்றாள். கயிலை மலையை அடைந்து போர் முழக்கம் செய்தாள். அங்குள்ள சிவகணத்தினர் நந்தி யெம்பெருமானிடம் சொல்ல, அவர் படைகளுடன் வந்து பாண்டி நாட்டுப் படையுடன் போர்

வண்மையுறு வானம்போல், வாழ்கின்ற தெய்வமென(து)
எண்ணத்தை யீர்த்தின்பம், எய்துகென ஓதாதோ !

செய்தார். அவராலும் எதிர் நின்று போரிட முடியவில்லை. தோற்று ஓடிச் சென்று சிவபிரானிடம் நிகழ்ந்ததை விண்ணப் பித்துக் கொண்டார். அதைக் கேட்ட எம்பெருமான் புன்னகை பூத்தான். உடனே போர்க்களத்துக்குச் சென்று நின்றான்.

எம்பெருமானுடைய திருவுருவத்தை அன்னை மீனாட்சி கண்டாள். அவருடைய வலப்பாகம் அல்லவா அவன்?

"ஒற்றை வார்கழற் சரணமும் பாம்பசைத்
துடுத்தவெம் புலித்தோலும்
கொற்ற வாண்மழுக் கரமும்வெண் ணீறணி
கோலமும் நூல்மார்பும்
கற்றை வேணியும் தன்னையே நோக்கிய
கருணைசெய் திருநோக்கும்
பெற்ற தன்வலப் பாதியைத் தடாதகைப்
பிராட்டியும் எதிர்கண்டாள்.

இந்த அழகிய திருக் கோலத்தைக் கண்டவுடன், இது வரையில் மிடுக்குடன் திக்குவிசயம் செய்துவந்த அம்மைக்கு அவளை யறியாமலே நாணம் வந்து சூழ்ந்து கொண்டது. அதே சமயத்தில் அவளுடைய திருமார்பின் நடுவில் இருந்த மூன்றாவது நகில் மறைந்தது. அம்மை தலையைக் குனிந்த படியே கால்விரலால் நிலத்தைக் கிண்டிக்கொண்டு நின்றாள். அப்போது மந்திரியாகிய சுமதி இந்தக் காட்சியைக் கண்டான். தடாதகைப்பிராட்டியின் திருவவதாரத்தின் போது அசரீரியாக இறைவன் கூறியதைக் கேட்டவனாதலின் அன்னையின் அருகே வந்து, "இந்தப் பெருமான் தான் உன்னுடைய நாயகனா வதற்குரியவன்" என்று கூறினான்.

அப்போது எம்பெருமான் அங்கயற் கண் அம்மையை நோக்கி, "என்று நீ திக்குவிசயம் செய்யப் புறப்பட்டாயோ,

---

உண்மைத் திருமறைகள், ஊன்றி அழைக்கின்ற
கண்ணான தெய்வம், கருதியெனைக் காவாதோ?

அன்று முதல் உன்னை நான் தொடர்ந்து வருகிறேன். ஒரு சோமவாரத்தில் மதுரைக்கு வந்து உன்னை மணம் செய்து கொள்கிறேன். நீ இப்போது அங்கே செல்வாயாக '' என்று அருளினான். அப்படியே எம்பிராட்டி தன்னுடைய உயிர் நாயகன் மேல் அன்பையும் உயிரையும் இருத்தி, ஊர் வந்து சேர்ந்தாள்.

அப்பால் திருமணத்துக்குரிய ஏற்பாடுகள் நடந்தன. எல்லோருக்கும் திருமண ஓலை போக்கினர். நகரை அமராவதிப் பட்டணம்போல அலங்காரம் செய்தார்கள். பூவுலகிலுள்ள மன்னர்களும் அமர லோகத்தில் உள்ளவர்களும் வந்து மொய்த்தார்கள். திருமால், பிரமன், இந்திரன் முதலியவர்கள் திருமணக் காட்சியைக் கண்டு இன்புற வந்தார்கள்; அவரவர்களுக்குரிய இருக்கைகளைப் பாண்டி நாட்டினர் அமைத்துத் தந்தார்கள்.

சிவபெருமான் திருமணக் கோலம் பூண்டு கயிலையினின்றும் எழுந்தருளி மதுரை வந்து அடைந்தான். அரண்மனைக்கு வந்தபோது மங்கல மடந்தையரும் பிறரும் எதிர் சென்று வரவேற்றார்கள். பின்பு காஞ்சனமாலை எம்பெருமானைத் தரிசித்து அம்பெருமானது திருவடியை விளக்கி இரு கரங்களைக் கூப்பி, '' அருமையாக அடியேன் பெற்ற மகளைத் திருமணம் செய்து கொண்டு அவளையும் இந்தப் பாண்டி நாட்டையும் ஏற்றுக்கொண்டு அரசாட்சி செய்யவேண்டும் '' என்று வேண்டினாள். சிவபெருமான் புன்னகையினால் தன் உடம்பாட்டைத் தெரிவித்து உள்ளே புகுந்து திருமணப் பீடத்தில் எழுந்தருளினான்.

தடாதகைப் பிராட்டிக்குக் கலைமகளும் திருமகளும் தோழியராக இருந்து மங்கல நீராட்டி அலங்காரம் செய்து, அழைத்துக் கொண்டுவந்து இறைவனுக்கருகில் உள்ள பீடத்

உலகம் அநித்யம்; உடம்பும் முடங்கக்
கலகயமன் கைப்படுமுன், காங்கேயா காவாயே!

தில் அமரச் செய்தார்கள். எம்பெருமானும் எம்பெருமாட்டியும் அருகருகே வீற்றிருந்த இந்தக் கோலம், ஒன்ருக இணைந்திருக்கும் பண்ணும் இசையும், நீரும் தண்மையும், பாலும் சுவையும், பூவும் மணமும், மணியும் ஒளியும் வேறு வேருகப் பிரிந்து அருகருகே இருந்தது போலத் தோன்றியது.

"பண்ணும்இன் னிசையும், நீரும் தண்மையும், பாலும் பாலின்
நண்ணும்இன் சுவையும், பூவும் நாற்றமும், மணியும் அங்கேழ்
வண்ணமும் வேறு வேறு வடிவுகொண் டிருந்தால் ஒத்த
தண்ணலும் உலகம் ஈன்ற அம்மையும் இருந்த தம்மா!"

கூடியிருந்த தேவரும் பிறரும் மகிழ்ச்சிக்கடலில் திளைக்கத் திருமண வினைகள் தொடங்கின. திருமால் எம்பெருமானுடைய திருவடியை விளக்கி, மாலையணிந்து தீபம்காட்டி அருச்சனை புரிந்து நின்ருன். திருவடி நீரை யாவரும் உண்டு நலம் பெற்ருர்கள். அப்பால் திருமால் இறைவன திருக்கரத்தில் அங்கயற் கண்ணம்மையின் திருக்கரத்தை வைத்துத் தாரை நீர் வார்த்தான். அப்போது தேவர்கள் பூமாரி பெய்தார்கள். யாவரும் ஆனந்த சாகரத்தில் ஆழ்ந்தார்கள். அப்பால் முறைப்படி பிரமன் எரிவளர்த்துப் புரோகிதத் தொழில் செய்ய எம்பெருமான் அங்கயற்கண் அம்மைக்குத் திருமங்கலிய நாண்பூட்டி எரிவலம் வந்தான். அம்மை அம்மி மிதித்து அருந்ததி பார்த்தாள்.

இவ்வாறு இந்தத் தெய்வத் திருமணம், யாவரும் பிறந்த பெரும்பயன் பெற்று இன்புறும்படி நிறைவேறியது. வந்தவர்கள் அம்மையையும் அப்பனையும் வணங்கி விடைபெற்றுச் சென்றனர். எம்பெருமான் சுந்தர பாண்டியன் என்னும் திருநாமத்தோடு, பழைய திருக்கோலத்தை மாற்றி மன்னவர் திருக்கோலத்தோடு இருந்து அரசாட்சிசெய்யத் தொடங்கினுன்.

ஆறுகள் தோன்றும் அழகாம் திருமலைமேல்,
ஏறுமுகம் காட்டுகின்ற எந்தாய்!நீ காவாயே !

விராலிமலை

திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ)

ஐந்து பூதமு மாறு சமயமு
மந்த்ர வேதபு ராண கலைகளும்
ஐம்ப தோர்வித மான லிபிகளும் வெகுரூப
அண்ட ராதிச ராச ரமுமுயர்
புண்ட ரீகனு மேக நிறவனும்
அந்தி போலுரு வானு நிலவொடு வெயில்காலும்
சந்த்ர சூரியர் தாமு மசபையும்
விந்து நாதமு மேக வடிவம
தன்சொ ரூபம தாக வுறைவது சிவயோகம்
தங்க ளானவ மாயை கருமம
லங்கள் போயுப தேச குருபர
சம்ப்ர தாயமொ டேயு நெறியது பெறுவேனோ :
வந்த தானவர் சேனை கெடிபுக
இந்த்ர லோகம்வி பூதர் குடிபுக
மண்டு பூதப சாசு பசிகெட மயிடாரி
வன்கண் வீரிபி டாரி ஹரஹர
சங்க ராஎன மேரு கிரிதலை
மண்டு தூளெழ வேலை யுருவிய வயலூரா !
வெந்த நீறணி வேணி யிருடிகள்
பந்த பாசவி கார பரவச
வென்றி யானச மாதி முறுகுகள் முறைகூடும்
விண்டு மேல்மயி லாட இனியக
ளுண்டு காரளி பாட இதழிபொன்
விஞ்ச வீசுவி ராலி மலையுறை பெருமாளே !

தேவிக கமுதாம் திகழ்சிவத்தின் சேய்,என்னை
ஆவிக் கமுதாம், அருள்வெளத்தில் ஆழ்த்தாதோ ?

(பதவுரை.) (வந்த.........வேலை யுருவிய வயலூரா!)

வந்த தானவர் சேனை கெடி புக-(அளவின்றி) வந்த அவுணப் படைகளின் ஆன்மா, அஞ்சி (ப்பாதலம்) அடையவும்;

இந்த்ர லோகம் விபூதர் குடிபுக - அறிவு மிக்க உயிர்கள் வானுலகம் எய்தி வாழவும்;

மண்டு பூத பசாசு பசிகெட - அடர்ந்துள பூதங்களும் பைசாசங்களும் (அவுண உடல்களை அருந்திப்) பசி ஆறவும்;

மயிடாரி - (அக்கிரம) எருமை முக அசுரனை அழித்த துர்க்கையும்;

வன்கண் வீரி - கடுமை உக்ர வீர காளியும்;

பிடாரி - பீடைகளை அழிக்கும் பெருமித சக்தியும்;

ஹரஹர - அக்ரமங்களை அழிப்பவனே!; சங்கரா என - (தடுமாறும் உயிர்களின்) இளைப்பைத் தவிர்ப்பவனே என்று (தொடர்ந்து) துதிக்கவும்;

மேருகிரி தலை மண்டு தூள் எழ - மேருமலையின் உச்சி வரை பெரும்புழுதி எழுந்து பெருகவும்;

வேலை உருவிய வயலூரா - (இவ்வளவும் ஏக காலத்தில் நேர,) ஞான சக்தியை ஊடுருவுமாறு ஏவிய வயலூர்ப் பெருமா!

(வெந்த நீறணி.........பெருமாளே!)

வெந்த நீறு அணி வேணி இருடிகள் - (நித்திய மந்திராக்கினியில்) நீற்றிய (புனித) திருநீற்றினைப் பூசி, (மகத்தான) சடையுடைய மாபெரும் முனிவர்கள்;

பந்த பாச விகார பரவசம் - கட்டுப்படுத்தி விகாரப் படுத்தும் ஆசைப் பெருக்கில் அவசம் அடையும் சூழ்நிலையை;

வென்றியான சமாதி - வெற்றி கொள்வதான சமாதி கூடியிருக்கும்;

தந்தைசிவம், தாய்சக்தி, தந்திமுகன் எம்முனெனும்
எந்தை முருகா! எனையேன்று கொள்ளாயோ?

முறுகுகல் முழை கூடும் - முதிர்ந்த கற்குகைகள் ஏராளமாக உள்ள;

விண்டு மேல் மயில் ஆட - மலைமேல் மயில்கள் (அழகிய தம்) தோகையை விரித்து ஆடவும்;

கார் அளி இனிய கள் உண்டு பாட - கருவண்டுகள் மதுரமான தேனைப் பருகி (ப்பண்) பாடவும்;

இதழி பொன் விஞ்ச வீசும் - கொன்றை மரங்கள் (பாட்டிற்கும் ஆட்டிற்கும் பரிசளிப்பதுபோல்) பொன்னிற இதழ்களைப் பெரிது பொழியும்;

விராலி மலையுறை பெருமாளே - விராலி மலையில் வீற்றிருந்து பேராட்சி செய்யும் பேரிறைவா!;

(ஐந்து பூதமும்.........லிபிகளும்.)

ஐந்து பூதமும் - (மண் நீர் தீ காற்று விண் எனும்) பூதங்கள் ஐந்தும்;

ஆறு சமயமும் - (சைவம், வைணவம், காணுபத்தியம், கௌமாரம், சாக்தேயம், சௌரம்; அல்லது வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவம் என்றெல்லாம் சொல்லப் பெறும்) ஆறு சமயங்களும்;

மந்திரம் - (எழு கோடி மந்திரங்களும்;)

வேதம் - (வித்தையான) ஞான வேதங்களும்;

புராணம் - பதினெண் புராணங்களும்; கலைகளும் - (அறுபத்திநான்கு) கலைகளும்;

ஐம்பதோர் விதம் ஆன லிபிகளும் - ஐம்பத்தொரு வகையான அட்சரங்களும்;

வெகு ரூப அண்டர் - அளவிலா உருவ மாற்றங்களையுடைய வானவர்களும்;

சர அசரமும் - இயங்கு பொருள்களும் அசையாப் பொருள்களுமான ஆன்மாக்களும்;

காலைக் கதிர்போற் கருத்திற் கலந்தருளும்
வேலா! அபயம்! விரைந்தென்னை ஏலாயோ?

உயர் புண்டரீகனும் - உயர்ந்த கமல மலரணை அயனும் ;
மேக நிறவனும் - கருமுகில் வண்ணத் திருமாலும் ;
அந்திபோல் உருவானும் - மாலை வானம் போன்ற செந்நிறத் திருமேனி உருத்திரனும் ;
(நிலவொடு........பெறுவேனோ ?)
நிலவொடு வெயில் காலும் சந்திர சூரியர் தாமும் - (தட்ப) நிலவுடன், (வெப்ப) வெயில் பரப்பும் மதியும் பரிதியும் ;
அசபையும் - (உதடுகள் அசைய ஜபம் செய்யாத) அஜபா மந்திரமும் ;
விந்து நாதமும் - (ஒளியும் ஒலியுமான) விந்து நாத தத்துவங்களுமான (யாவும்) ;
ஏக வடிவம் - ஒருங்கு இயைந்தது (பரம்பொருளின்) திருமேனி ;
அதன் சொரூபம் ஆக உறைவது சிவயோகம் - அப்பரம்பொருளின் சொரூபமாக ஊடுருவி, உறைப்பேறி (ச்சிறக்க) இருக்கும் சிவயோகத்தை ;
தங்கள் ஆணவ மாயை கரும மலங்கள் போய் - தம்தம் ஆணவம், மாயை, கர்மம் எனும் (நீங்கா) மும்மலங்களும் நீங்கி ;
உபதேச குருபர சம்ப்ரதாயமொடு - உபதேசிக்கும் பரமாசார்ய அனுட்டான வழி முறையுடன் ;
ஏயும் நெறியது பெறுவேனோ - (பெரிதும்) கலக்கும் அவ்வழியை (அடியேன்) பெறக் கடவேனோ ? (எ - று).

விரிவுரை

தாற்றுக் கோலை வேளாளர் தாங்கினர் ; வைசியர்கள், குறிப்பாகத் துலாக்கோல் கொண்டனர் ; வேந்தரிடம் செங்கோல் விளங்கியது. அந்தணர்கள் முக்கோல் ஏந்தினர் ;

விழித்தெழுந்த போழ்தே, விளக்கொளிபோல் மின்னும்
சுழுத்தி சுகங்காட்டும் நீ உளத்தில் தோயாயோ ?

ஒற்றைக் கோலும் அவர்கட்கு உண்டு. இந் நால்வர் கோல் மூலம், நாட்டில் தர்மம் நடமாடும்.

அக் கோல்கள் நேர்மை தவறினால், மழை தடுமாறும்; விளைவு குன்றும்; வறுமை வளரும்; மாறுபட்டு மக்கள் மல்லாடுவர்; ஒருவரை ஒருவர் ஏய்த்துப் பிழைப்பர்; இதனால் உலகம் அல்லோல கல்லோலம் ஆகும்.

கோல்களால் விளைந்த குறை தவிர்க்க, விமலன் திருக்கரத்து வேல் வெளிப்படும். அக்கோல்கட்கு இயல்பான அறிவு இல்லை; அவைகள், உடையவரால் மதிப்பை அடையும். வேலோ ஞானமயம்; நித்ய சத்ய நிக்ரக அநுக்ரக தெய்வமயம். அதன் செயலால, பாவ இருள் பாதலத்து மறையும்; உத்தம புண்ணியம் உயர்ந்து வாழும்; இது சுருதி சொல்லும் செய்தி.

தநு என்பவள் பெற்ற பிள்ளைகட்கு, தாநவர் என்று பெயர். இவர்கள், தம் பெயர்க்கு ஏற்ப, வெறும் தேகாபிமானிகள். மேற் சொன்ன நாற்கோலும் தவறுபட்ட ஒருகாலத்தில், தொல்லை தரும் தானவர்களே எங்கும் தோன்றினர்.

தாழ்ந்தாரை உயர்த்தினர்; உயர்ந்தாரைத் தாழ்த்தினர்; சிறந்த புலமைக்கு மக்கள் செவிகொடுத்திலர். நாடக மேடைகள் எங்கும் நடமிடலாயது. அதனில் பவிஷு கெட்டவட்குப் பதிவிரதைப் பட்டம். கூத்தாடிகளே எங்கும் கும்மாளம் கொட்டினர். அவர்கள் வருகைக்குத்தான் வரவேற்பு; அவர்கள் வாக்கிற்குத் தான் செல்வாக்கு. ஆஸ்திக உணர்வினரும், நுனிப்புல் மேய்ந்து நுடங்கி முடங்கினர்.

தருமம் இங்ஙனம் தலைகீழான செய்தியை அறிந்து, அறியாமை இருளை யகற்ற, ஞானவேலை ஊடுருவ ஏவினை! அதன் தரிசன ஆக்கத்தால், 'தாநவர் சேனை கெடிபுக— விபூதர் இந்த்ர லோகம் குடிபுக' நேர்ந்தது.

உண்மை யுரைப்பார் உறவு எமக்கமைய,
எண்ணுதிநீ உள்ளத்தால், எந்தை பெருமானே!

(விபுதர் - விசேட அறிவினை யுடையவர்; இதனால் தேவர்கட்குப் புலவர் என்றே பெயருண்டு; ஓசை நயம் கருதி, விபுதர் விபூதர் எனப் பெற்றனர்.)

அவுண உடல்களைப், பூத பைசாசங்கள் தின்று தீர்த்தன. இனி அசுர நாற்றமே இல்லை உலகில் என்ற நிலைமை எய்தியது. இந்த அற்புத நேரத்தில், போர்க்களத்தில் வீர சக்திகள் புகுந்தனர்.

அகத்தும் புறத்துமான தொல்லைகளை அழிப்பானை, ஹரஹர என்றனர்.

இடர்ப்படு பிறவியின் இளைப்பாற்றுவானை, சங்கர என்று கூவி அழைத்துக் கும்பிட்டனர்: இத் தாய்க்குல அழைப்பு, சேய்க்குலமான நமக்கு ஒரு சமிக்ஞை. இவ்வளவு செய்தியும் ஏக காலத்தில் விளைய, செயல் செய்தனை!

நன்செய் நிலங்கள் நல்வளம் நல்க, அதனால் வயலூர் எனும் பெயர் வாய்த்த பதியில், எழுந்தருளி யிருக்கும் தெய்வமே!

வேலை உருவிய வயலூரா!

என்று, வாயார உம்மை வாழ்த்துவம்.

தாய் தந்தை மனைமக்கள் சுற்றம் யாவும், ஈஸ்வர லீலையின் பிம்பங்கள். இது தான் முழு உண்மை. இந்த எண்ணம் எழாதபடி, கர்மம் கண்ணை மறைத்தது. மாயை மனத்தை மயக்கியது. பாழும் இருளை ஆணவம் பரப்பியது.

அவைகளின் சாகஸங்களால், இவர்கள், ஆக்கையின் சுகத்திற்கு அமைந்தவர்கள் என்னும் நினைவு எழுந்தது. இதனால் இடர்கள் பலவும் எய்தின.

இனி இங்கு இருந்தால் அதோகதி தான் என்று, உணர்ந்த உத்தமர்கள் ஓடினர். எவரும் வாராத இடம் தேடி

பயிரை விளைத்தும் பசிகொண்டார் போல,
உயிர்தான் சரணடைந்தும், ஓங்குலகில் தூங்குவதோ?

னர். புனித குகைகளுள் புகுந்தனர், பூதி அளிக்கும் விபூதி தரித்தனர்.

பந்த பாசத்தில் பரவசம் உண்டு; அது விகார பரவசம். அதனால் உடல் பலவீனம்; மனோ பலவீனம்; அறிவு மெலிதல்; ஆத்ம ஹத்தி யாவும் அப் பரவச அனுபவம்.

வீணான அதை வெல்லும் வெற்றியே வெற்றி; அது கருதிய அவர்கள், குகைகளுள் புகுந்தனர். அங்கு இருந்தே தத்வ லய சமாதி, சவிகற்ப சமாதி, நிர்விகற்ப சமாதி, சஞ்சார சமாதி, ஆரூட சமாதிகளை முறையே பயின்று முன்னேறினர். இறுதியில் மோன சமாதி கூடி முறுவலிக்கின்றனர். அந்த

'வெந்த நீறணி வேணி இருடிகள்
பந்த பாச விகார பரவச வென்றி யான சமாதி'

கூடியிருக்கும் அவர்கள் தவமே, இன்றுவரை இவ்வுலகைத் தாங்கிக் கொண்டு இருக்கிறது.

அவர்களது தவ ஒளி, வெளி யுலகில் வியாபித்து, அளவிலா இன்பத்தை அஃறிணைகட்கும் அளிக்கும்.

அவர்கள் தவங்கிடக்கும் குகைக்கு மேற்பட்ட மலை உச்சியில் மயில்கள், அழகிய தம் தோகைகளை விரித்து ஆடும். கருவண்டுகள், தேன் பருகிய களிப்பால், பண்களை ஆடலுக்குத் தக்கபடி பாடும். பாடல் ஆடல்கட்குப் பரிசளிப்பார்போல், பொன் இதழ்களைக், கொன்றை மரங்கள் பொழியும். இந்த இயற்கைக் காட்சியை, ஓவாது எந்நூலும் ஓதும்.

அழகிய இந்த விராலி மலைமேல், நிலையாக எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே! விநயமொடு அடியேன் செய் விண்ணப்பம் கேட்டருளும்!

ஐம்பூதக் கூட்டம் இந்த உலகம். இங்கு ஆறு சமயங்கள் உம்மை ஆய்கின்றன.

அவ்வியத்தால், எங்கும் அக்ரமம் சேர்தலினால்,
இவ்வுலகில், எப்புறத்தும் ஏக்கத்தின் சூழ்நிலையே

நமஃ ஸ்வாஹா, ஸ்வதா, வஷட், வௌஷட், பட், ஹூம்பட் எனும் எழுவகை முடிபுகொண்ட மந்திரங்கள் உம்மை ஏத்துகின்றன.

இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் எனும் நான்மறைகளும், உமது பெருமையையே நவிலுகின்றன.

பதினெட்டுப் புராணங்களும், உமது சொருப தடத்த லட்சணங்களைச் சொல்கின்றன.

ஆதாரங்கள் ஆறிலும், அகரம் முதல் க்ஷகர இறுதியான ஐம்பத்தொரு அட்சரங்கள், உமது அனுபவ உறுப்பாக அமைந்துள்ளன.

உதடு அசையாது ஒலிக்கவுள அஜபா எனும் அம்ச மந்திரம், சிவோக நுட்பத்தைச் சிந்திக்கத் தூண்டும்.

அமுத போகத்தை, விண்ணில் அருந்துகின்றூர் வானோர். அகில உலகிலும், அசையும் பொருள்கட்கு அளவில்லை; அசையாப் பொருள்களையும் அளந்து காண ஆவது இல்லை; வரையறை யின்றி அவைகள் வளர்ந்திருக்கின்றன.

பாரனைத்தையும் பிரமன் படைக்கின்றான்; கருமுகில் வண்ணர் காக்கின்றார்; அநதி நிறத்து உருத்திரர், இறப்பில் பிறப்பில் வரும் இளைப்பாற்றுகின்றார்.

தட்ப ஒளிபரப்பி, சந்திரன் வானில் தவழ்கின்றான்; வெப்ப வெயில் விரித்து, கதிரோன் விளங்குகின்றான்;

95-ஆம் தத்துவம் விந்து. இறுதி தத்துவம் நாதம். அடே அப்பா! எண்ணிப் பார்க்க எவரால் இயலும்? இப்படி அகண்டாகாரமான யாவும், உமது சொருபம் என்று உணர்கிற போதே உள்ளம் குளிர்கிறதே!

ஏகமான அச்சொருபத்தில் இணைந்து இருப்பது சிவ யோகம். பேஷ். அங்கிலை எய்த முயல்வதுதான் ஆத்ம தர்மம்.

உள்ளம் குளிர உயிர்குளிர ஊனகுளிர,
அள்ளி முருகன், எனையணைப்ப தென்றேயோ?

இந்நிலையை ஏட்டில் படித்து எய்த இயல்வதா? எந்த மேடையிலும், இதுகுறித்து எவர் வாய் திறக்க இயலும்?

மும்மலம் அகன்ற முத்தர்கள், எங்கும் உளர். அவர்களை அறிய முயலாத அநியாயத்தை, யாரிடம் சொல்லி ஆறுவது? அந்தப் பரம்பரை உபதேச பரமாசார்யர்கள் காட்டும் சம்ப்ர தாய மார்க்கம் சாலச் சிறந்தது.

குட்டிகளொடு கரடியை ஆற்று வெள்ளம் அடித்துச் செல்ல, அவைகள் தன் ஆடும் குட்டிகளுமாம் என்று அறிவு மயங்கிய கோனார், குபுக்கென்று ஆற்றில் குதித்து, தாவிச் சென்று அவைகளைத் தழுவினராம். தக்க புணை கிடைத்தது என்று, கரடி அவரைத் தழுவியது; ஒருவரை யொருவர் பற்றுது இருந்தால், ஒருவேளை வெள்ளம் கரையில் ஒதுக்க, பிழைப்பதும் ஆகும். அங்ஙனம் இன்றி, விடேன் விடேன் என்று தழுவி, கரடியும் பிழைக்கவில்லை; கோனாரும் இறந்து தொலைந்தார்.

மும்மல வெறியில் முதிர்ந்த குரவர்கள், பித்தர்போல் பிதற்றித் திரியும் சீடர்கட்கு, புத்திபோல் காட்டும் உபதேசம், இவ் வரலாறுபோல்தான் ஆகும். அங்ஙனம் இன்றி, மேற் சொன்ன சதாசாரியர் தாள்மலர் சார்ந்து, அவர்கள் காட்டும் அநுபவ நெறியில், கணுவற அடியேன் கலக்கும் பேறு என்று பெறுவேனோ?

வயலூரா! பெருமாளே! உபதேச குருபர சம்ப்ரதாயமொடு ஏயும் நெறியது பெறுவேனோ? அடியேன் பெறும் நாள் ஒன்று வருமேயோ என்று வீழ்ந்து அலறி விண்ணப்பித்தபடி,

வாழ்க திருப்புகழ் வளம்!

கலைஞானம், காணும் கதிஞானம், எல்லாம்
அலைஞானம்; நின்றன் அடிஞானம் தாதுரையே

280

அருள் விழா

(அநுஷம்)

அருணகிரிநாதப் பெருமான் தமக்கு இறைவன் ஒரு விடுதலை வாழ்வைத் தந்தான் என்று பாடுகிறார்.

"ஏழையின் இரட்டைவினை ஆயதொர் உடற்சிறை
இராமல் விடுவித்தருள் நியாயக் காரனும்"

என்று வேளைக்காரன் வகுப்பில் திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறார். கந்தர் அலங்காரத்தின் இறுதிப் பாடலில்,

"இடுதலைச் சற்றும் கருதேனைப் போதம் இலேனை அன்பாற்
கெடுதல் இலாத் தொண்டரிற் கூட்டியவா கிரௌஞ்ச வெற்பை
அடுதலைச் சாதித்த வேலோன் பிறவி அற இச்சிறை
விடுதலைப் பட்டது விட்டது பாச வினைவிலங்கே"

என்று தமக்குக் கிடைத்த சுதந்தர வாழ்வைப் பற்றிப் பாடியிருக்கிறார். உடற் சிறையினின்றும் விடுபட்ட சுதந்தர வாழ்வே ஜீவன்முக்தி இன்பம். அதைப் பெற்றவர் அருணகிரியார். இது ஆன்ம சுதந்தரம்.

இவ்வாறு தாம் ஆன்ம சுதந்திரம் பெற்றுப் பிறரும் அதனைப் பெற வழிகாட்டும் அருணகிரியார் திருவிழாவை நம் தேசம் சுதந்தரம் பெற்ற நாளில் கொண்டாடுவது எவ்வளவு பொருத்தமானது! தேசம் சுதந்தரம் பெற்று விட்டவுடனே இன்ப வாழ்வு நமக்கு வந்து விடவில்லை. அதை யடைய இன்னும் எவ்வளவோ முயற்சி செய்யவேண்டும். தனி மனிதர்களுடைய பண்பு உயர வேண்டும். அப்போது தான் சமுதாயத்தின் நிலை உயரும். தனி மனிதன் இந்த உலகியற் சுதந்தரத்துக்கு மேலே ஆன்ம சுதந்தரம் என்ற ஒன்று இருக்கிறது என்பதை எண்ணி அதை அடைய

முயலவேண்டும். அப்படி முயன்றால் அவன் அன்பே வடிவ முடையவனாகி விடுவான்.

ஆன்ம சுதந்தர நெறியிலே நாம் செல்வதற்குத் தம் முடைய அரிய திருப்பாடல்களால் வழி வகுத்தவர் அருணகிரிநாதர். அவருக்குத் திருநாமமும், உபதேசமும், அநுபவமும் கிடைத்த இடம் திருவண்ணாமலை.



ஆதலின் அந்தத் தலத்தில் எட்டு ஆண்டுகளாக அருணகிரிநாதர் விழா மிகச் சிறப்பாக நடைபெற்று வருவது இறைவனுடைய திருவருட் சம்மதம் என்றே கொள்ள வேண்டும். அந்தத் திருவருளே திருவண்ணாமலை விழாக் குழுவினரையும் சென்னை அடியார் திருக்கூட்ட இறைபணி மன்றத்தினரையும் இயக்கி இந்த விழாவை ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து வரும் சிறப்போடு நடத்திக் கொள்கிறது.

இந்த ஆகஸ்டு, பதினைந்தாம் தேதியில் 8-ஆவது ஆண்டு அருணகிரி நாதர் திருவிழாநடை பெற்றது; சிறப்பாக நடை பெற்றது, மிகச் சிறப்பாக நடை பெற்றது, மிகமிகச் சிறப்பாக நடைபெற்றது என்று வார்த்தைகளைக் கூட்டிச் சொன்னால், இந்தத் திருவிழாவின் பெருமையைச் சொல்லிவிட்டதாகாது. சென்ற முறைகளில் இருந்த பல குறைபாடுகள் இந்த முறை இல்லை என்று சொன்னால் அதற்குப் பொருள் உண்டு. உணவு அருந்துதல், கூட்டத்தின் எழுச்சி, பஜனை புறப்படுதல் ஆகிய

பொன்னைப் பொலிவுறுமுன் புத்தமுத நற்கரத்தால்,
இன்னேவா ! என்றென்னை, யீர்ப்பதுவும் என்றேயோ ?

பல துறைகளில் இந்த முறை கட்டுப்பாடும் அமைதியும் நன்ருக இருந்தன.

காலையில் நாதசுரக் கச்சேரிகள், அப்பால் கோஷ்டிகளின் பஜனை, பிறகு சொற்பொழிவுகள், இரவு ஊர் வலம், பிற்பகல் தொடங்கி இரவு நெடுநேரம் வரை வீதி முழுவதும் பஜனைக் கோஷ்டிகளின் தேவார திவ்யப் பிரபந்தத் திருப்புகழ் முழக்கம் என்று வரிசைப்படுத்திச் சொல்லிவிட்டால் போதுமா ? ஏதோ ஒரு நூலின் அத்தியாயப் பெயர்களை மாத்திரம் வாசிப்பது போலத்தான் இருக்கும். அப்படியானுல் ஒவ்வொன்றையும் விரிவாகச் சொல்லிக் கொண்டே போகலாம். அப்படியாவது முற்றக்கூறி முடித்தோம் என்ற திருப்தி நமக்கு உண்டாகுமா? நிச்சயமாக உண்டாகாது.

அந்தக் காட்சி காண்பதற்குரியது: பஜனையும் சொற்பொழிவுகளும் கேட்பதற்குரியன. எல்லாம் நெஞ்சில் உணர்ந்து இன்புறுவதற்குரியன.

இந்த முறை திருக்கோயிலில் அமைந்திருந்த பிரம்மாண்டமான பந்தலுக்குக் காரைக்கால் அம்மையார் பந்தல் என்ற திருப்பெயரை வைத்திருந்தார்கள். அந்தப் பெயருக்கு ஏற்றபடி மேடையின் மேல் தாய்மார்களின் குரல் அதிகமாகக் கேட்டது. பலர் பஜனை செய்தார்கள். பல அன்னைமார் சொற்பொழிவாற்றினுர்கள். ஆடவர்களும் பிரசங்கம் செய்தார்கள். ஸ்ரீ கிருபானந்தவாரியாரவர்களும் ஸ்ரீ அழகரடிகளும் ஸ்ரீ கி. வா. ஜ. அவர்களும் அருமையாகப் பேசினுர்கள். கூட்டத்தை இங்கிதமாகத் தம் பேச்சைக்கொண்டும் நாமாவளிமுழக்கத்தைக்கொண்டும் ஸ்ரீபித்துக்குளி முருகதாசர் நடத்தினுர்.

ஆயிரக் கணக்கான தாய்மார்களும் ஆயிரக்கணக்கான அன்பர்களும் ஆவலோடு கூடி அமர்ந்து 15 மணி நேரமாகப் பாட்டையும் பேச்சையும் சலிப்பின்றிக கேட்டார்கள். சரீ

நேசா ! முருகா ! நினதருளை எண்ணுநரை,
ஆசா பாசங்கள், அடிமைசெய எண்ணுவதோ ?

ரத்தை மறந்து யோகம் செய்பவர்களைப் போல அவர்கள் அமர்ந்திருந்தது கண்படைத்தவர்கள் காணவேண்டிய காட்சி.

எழுபத்தைந்துக்கு மேற்பட்ட தொண்டர் குழாத்தினர் இறைவன் புகழைப்பாடி வீதிவலம் வந்தனர். அன்று திருவண்ணுமலையில் தமிழ் நாடே கூடியிருந்தது என்று சொல்லலாமா? தமிழ்நாட்டுக்கு அப்பாலுள்ள பங்களூரிலிருந்து தனிப் பஸ் அமர்த்திக் கொண்டு வந்திருந்த நண்பர்கள் கருநாடக நாட்டுப் பிரதிகளாக வந்திருந்தார்கள். 'பூர்வ பச்சிம தட்சிண உத்தர திக்குள பத்தர்கள்' வந்தார்கள் என்று சொன்னுலே போதுமே!

இதை விழா என்று சொல்லலாம். ஆனல் விழாவில் இந்த அமைதியைக் காணமுடியாது. அருள் மின்சாரத் தாக்குதலுக்காக ஏங்கி நிற்கும் அன்பர்கள் எல்லாம் ஆண்டுக்கு ஒரு முறையாவது இந்த இன்பத்தை அடையலாம் என்று வருகிருர்கள். ஊரையும், உலகையும், துன்பத்தையும் துயரத்தையும் மறந்து இறைவன் அருள் ஒன்றையே எண்ணி, 'தன்னை மறந்த லயந்தனனில்' இருக்கும் வாய்ப்பு இந்தத் திருவிழாவில் கலந்து கொள்பவர்களுக்குக் கிடைத்தது.

பேசுகிறவர்கள், கேட்பவர்கள், அன்னம் இடுகிறவர்கள், உண்பவர்கள, தொண்டர்கள், வந்திருப்பவர்கள் என்ற வேறுபாடே இன்றி இந்தக் கூட்டம் முழுதையும் ஒரே நிலையில் ஒரே எண்ணத்துடன ஒரே இன்பக்கடலில் ஆழும்படி செய்கிறது இந்த விழா. இனி அடுத்த அருணகிரியார் விழாவிலே கலந்துகொள்ள இப்பொழுதிருந்தே எண்ணமிடுகின்றனர் அன்பர்கள். ஆம்; இது இடை யீடிலாத கங்கையாறு போல நடக்கவேண்டிய விழா. ஆண்டவன் அருளிபக்கமாக அமைந்த விழா. இறைவன் அருள் என்பது என்ன என்ன அற்புதஙகளைச் செய்யும் என்பதைக் கண் கூடாகக் காணும்படி செய்யும் விழா. வாழ்க!

குமாரஸ்தவ விளக்கம்.

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.)

16. புகழ்முனி பதயே நமோநம:

புகழ்முனி - திருப்புகழ் முனிவராகிய அருணகிரி நாதருடைய,

பதயே - தலைவனுக்கு, நமோநம: - போற்றி! போற்றி!!

புகழும் புகழ்முனியும்:

உலகம், உயிரினம், இறைவன் என்ற மூன்றிற்கும் புகழ் உண்டு. அது, சில சிறப்பியல்களால், சில செயல்களால், பிறவற்றால் வரும். உலகு அறிவற்ற பொருள். அதற்கு உரிய பெருமையாவது நிலையாமை என்பதே

" நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு "

உயிரினத்தைச் சார்ந்த மக்கள் அறிவு விளங்கப் பெற்றவர்கள். ஆயினும் அவர்களுடையது சிற்றறிவு. மேலும் அவர்களுடைய வாழ்வும் சின்னாள் வாழ்வே. அதற்கேற்ப அவர்கட்கு உண்டாம் புகழும் சின்னாளில் தோன்றி நின்று அழிந்து விடும். ஆனால் என்றுமுள்ள இறைவன் புகழோ அவனைப் போலவே என்றும் நின்று நிலவக் கூடியது. அதனையே " பொருள் சேர் புகழ் " என்பர் வள்ளுவனார். என்றும் மாறாத மாபெரும் புகழையே அவ்வாறு குறிக்கிறார். பொருள்படுத்துவது என்றால் மதிப்பது என்று பொருளாகும். பொருள் என்பதும் மதிக்கத்தக்க அல்லது (நிலையான) மதிப்புடைய ஒன்று என்னலாம்.

பொருளல்ல வற்றைப் பொருள்என் றுணரும்
மருளானும் மாணாப் பிறப்பு.

சொர்ணச் சுரங்கம்நீ சூழ்ந்திருக்கப், புத்திகெட்டு
இன்னொருவர் காப்பரெனக், கையேந்த வேண்டாவே!

(மெய்ப்பொரு ளல்லாதவற்றை மெய்ப்பொரு ளென்று உணரும் விபரீத உணர்வினால் இன்பமில்லாத பிறப்பு வரும்) என்ற திருக்குறளின்படி, பொருள் என்பது மெய்ப் பொருளையே உணர்த்தும். அத்தகைய மெய்ப்பொருள் இறைவனே ஆகும். எனவே புகழ் என்பதும் மெய்ப்பொருளான இறைவன் புகழே எனக் கொள்ள வேண்டும். வடமொழியில் நிலைத்த பொரு ளாகிய இறைவனை 'வஸ்து' என்பர். அதிலிருந்து இறைவன் உள்ளான் என்று உறுதிபடக் கூறலை 'வஸ்து நிச்சயம்' செய்தல் என்று வழங்குவர். என்றும் அழியாத உண்மை யைக் கூறும்போது "வாஸ்தவமாகச் சொல்லுவோம்" என்பர். இங்கு வாஸ்தவம் என்பது வஸ்து (கடவுள்) சம்பந்தமுடையது என்றும். எனவே வடமொழியில் வஸ்து அல்லது தென் மொழியில் 'பொருள்' என்ற இரண்டும் அழிவிலாப் பொரு ளாகிய இறைவனையே குறிக்கும். ஆகையால் இறைவன் பொருள் சேர்புகழ்—இறைவனாகிய அழிவற்ற மெய்ப்பொரு ளின் புகழ் என்றும் பொருள்படும். அழிவற்ற அதன் நிலையை நோக்க அது கடவுள் தன்மையுடைய புகழ் ஆகிறது. அதுவே திருப்புகழ் எனப்பட்டது. இறைவன் புகழை வழுத்திய முனிவரும் 'புகழ்முனி' ஆனார்.

திருப்புகழ் என்பது எது ?

என்றும் அழியாத இறைவன்புகழ் திருப்புகழ் என்னலாம். ஆனால் ஆறெழுத்தாண்டவனாகிய முருகன் புகழே இன்று திருப்புகழ் என்றும், அதுவும் நம் அருணகிரியார் அருளிய முருகன் புகழ்மாலையே திருப்புகழ் என்றும் உலகில் வழங்கக் கேட்கிறோம்.

நன்னியமம் நீங்காத நல்லறிஞர், எந்நாளும்
அன்னிய மாயத்(து) அழுந்தார்கள் நிச்சயமே.

திருப்புகழ் யாருக்கு உரியது ?

'பாலும் பழமும் மணமக்களுக்கு அளித்தனர்' என்று ஒருவர் சொல்கிறார். இங்கே பால் என்பது வேறு எதனையும் குறிக்காது 'பசும் பாலையே' உணர்த்தும். அதுபோலவே பழம் என்பதும் மா, பலா, மாதுளை, ஆப்பிள், ஆரஞ்சு, திராட்சை முதலியவற்றை உணர்த்தாமல் வாழைப்பழத்தையே குறிக்கும். தேவாரம் என்றால் மூவர் திருவாக்கு; திருவாசகம் மணிவாசகர் அருள்வாக்கு; திருமந்திரம் திருமூலர் திருமறையை உணர்த்தல் போலத் திருப்புகழ் என்றால் சிறப்பில் சிறப்பாக நம் அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் மறையையே உணர்த்தும்.

"காதலாய் ஒருமயிலில் களித்தேறும் தணிகைவரைக்
கந்தன் யார்க்கும்
நாதனே எனத் தெளிந்த அருணகிரி நாதனுமுன்
நவின்ற பாவை
ஓதுவார் திருப்புகழ் என்று உலகிலுள்ளோர்
அதற்கு நிகருண்டோ மற்றைச்
சாதலார் விண்ணவர்கள் தம்புகழைத்
திருப்புகழாய்ச் சாற்றிடாரே." (கந்தப்ப தேசிகர்.)

ஆறுமுகப் பெருமானுக்கு உரியன எல்லாம் ஆறு என்றே இருக்கும்.

"ஆறு கொலாம் அவர்தம் திரு மாமுகம்
ஆறு கொலாம் அவர் தோற்றிய வூர்இடம்
ஆறு கொலாம் அவர் தானருள் நூல்களும்
ஆறு கொலாம் அவர் மந்திரந் தாமே"

[குமர வேளின் திருமுகங்கள் ஆறு. தோன்றிய இடம் (கங்கை) ஆறு. அவரது படைவீடுகள் ஆறு. அவருக்கு

எம்மொழிக்கும் தாரகமாம் நின்சமிக்ஞை ஓர்ந்து,மதி
செம்மையுறு மோனந்தா! செல்வஅருள் செவ்வேளே!

உகந்த நூல்கள் திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தரந்தாதி, திருவகுப்பு, திரு எழுகூற் றிருக்கை என்ற ஆறு. அவரது திருமந்திர எழுத்துக்களும் ஆறு] என்பர்.

திருப்புகழ் என்ற சொல்லும் ஆறு எழுத்துக்கள் உடைமை யால் ஆறக்கரத் தெய்வமான முருகனுக்கே உரியதாய் அருணகிரி யார் அருளிச்செய்தனர்.

புகழ்முனி யார்?

ஆதலின் பாம்பனடிகள் திருவாக்கில் புகழ்முனிவர் என்ற திருநாமம் ஸ்ரீமத் அருணகிரிநாத முனீந்திரர் ஒருவரையே குறித்தும் பயிலும்; திருப்புகழ் அருளிய முனிவர் 'புகழ் முனி' எனப்பட்டார். நமது பாம்பன் சுவாமிகள் முருக வேளையே முழுமுதல் எனக்கொள்ளும் ஒருமூர்த்தி வழிபாட்டில் உரமான உறுதி யுள்ளனர். அதனுல் எநத வேளையும் கந்த வேளையே சந்தத் தமிழில் பாடும அருணை யண்ணலிடம் அவருக்கு ஈடுபாடு அதிகம். அருணை முனிவருடைய ஒரு நெறியே குருநெறியாகவும் பெருநெறி யாகவும் கொண் டொழுகு மியல்பினர். எனவே அருணகிரியாரைத் திருப்புகழ் நாவலர், புகழ்புதன், ஓசைமுனி, சந்தமுனி, பாட்டன் எனற பல திருநாமங்களால் துதித்துள்ளார். தமது பாடலின் இறுதியில் அருணகிரியை எப்போதும் மறவாது போற்றுவார். அருண கிரிப் பெருமானுக்கு இப்பெயர்கள் உளதெனபது,

"கடிகெழு புகழ்முனி கடவுளாம் சேயவற்கு
அடிமையாய் நின்மின்! (திருவலங்கல்)

"திருப்புகழ் நாவலர் திருப்புகழணிக்கு
விருப்புறு வேலுடையாய்!" (,,)

"திருப்புகழோன் கண்ட தங்கம் (தங்க ஆனந்தக்களிப்பு)

"திருப்புகழார் புகழ்ந்த கந்த
சிகரியுறை சிவமே" (கழுகுமலைபாதி கந்தகிரிபாதி)

மூலர் குறிப்பறிந்து, மூவர் தமிழோதும்
சீலத்தார் தாணிழலில், சேரவருள சேயோனே.

"ஓசைமுனி யாட" (பஞ்சாமிர்த வண்ணம்)

"சந்தமுனி நெஞ்சத் தடங்கமலமே" (மயிலமலைப் பதிகம்)

"திருவார்புகழ் சொன்னபிரான்"
(குமரவேள் பதிற்றுப் பத்தந்தாதி)

"புகழ்ப்புதன் நெறிவிழைவீர்!" (ஸ்ரீமத் குமாரசுவாமியம்)

"மாண்பார் சந்தமுனி இசைவாழ்வே" (,,)

"முழுநாரொடு புகழ்பாடிய முனிவர்க்கு அருளேசெய்
தொழுநோயறவே செய்தொரு சுகநல்கிய துரையே"
(பெரு வேண்டுகோள்)

"பாட்டனேர் பதி வேட்புளாய்" (ஸ்ரீமத் குமாரசுவாமியம்)

(பாட்டுப் பாடிய அருணகிரி பாட்டன் ஆகிறார்)

எனவரும் அவரது திருவாக்குகளாலேயே அறிக. இவற்றால் புகழ்முனி அருணகிரிநாத சுவாமிகளே என்பது புலனாகும்.

முடிப்பு :—திருப்புகழ் முனிவரான அருணகிரியாரை அடிமை கொண்ட அருட்பெருந்தலைவர் குமாரபிரானே யாவர். அவரே திருப்புகழைப் பாடும்படியான கல்வியும் அறிவும் தந்து அப்பாடலைத் தாமே விரும்பி ஏற்றுக் கொண்டார்.

"யாம் ஓதிய கல்வியும் எம் அறிவும்
தாமே பெற வேலவர் தந்தது"

என்பதை உன்னுக. அதுமுதல் அருணகிரி 'புகழ் முநி' (புகழ் பாடுதலில் வல்ல முநிவர்—என்று,) எல்லோரும் புகழும் முநிவ ராகவும் விளங்கினார். செவ்வேளைப் புகழ்ந்ததால் அருணகிரி முனிவரை அடியவர் அனைவரும் புகழ்வாராயினர். எனவே திருப்புகழ் பாடிய அல்லது அடியார்களால் புகழப்படுகிற முனி வரான அருணகிரிநாத சுவாமிகளது தலைவருக்கு வணக்கம் என்ற பொருளெலாம் புலப்பட

"புகழ் முனி பதயே நமோநம"

என்று பாம்பனடிகள் பரவுகிறார்.

ஞானவிநோதன்

(கி. வா. ஜகந்நாதன்)

"ஆதாரம் இல்லாத எளியேன் நின் அருளைப் பெற வேண்டும் என்று நீ திருவுள்ளம் கொள்ளவில்லையே! அது என்னுடைய முயற்சியினால் ஆவதன்றே!" என்று இரங்கிய அருணகிரியார், விண்ணப்பத்திற்கு மேல்விலாசம் எழுதுவாரைப் போல, முருகனை விளிக்கிறார்.

ஆண்டவன் ஞான சொரூபி. அவன் திருவருள் பெற்றவர்கள் பேரறிவுடையவராகிறார்கள். அவன் புகுந்து விளையாடும் இடம் எல்லாம் அறிவு நிலையங்கள். அவனுடைய விளையாட்டே ஞானவிளையாட்டு. நாம் ஆடுவது ஊன நாடகம். அவன் ஆடுவது ஞான நாடகம். அந்த ஞான விளையாட்டை நடத்துவதற்குத் துணையாக இருப்பவை ஞான நூல்கள். ஞான நூல்களிற் சிறந்தவை வேதங்களும் ஆகமங்களும். அவற்றைத் தந்தவன் அவன். அவற்றின் பொருளாகி நிற்பவன். அவற்றையே கருவிகளாகக் கொண்டு ஞான நாடகம் ஆடுபவன் அவன். முருகப்பெருமானுடைய கைவேலாக வேதம் ஆகமங்களும் உள்ளன என்று அருணகிரியார் ஓர் அருமையான கருத்தைக் கந்தர் அலங்காரத்தில் சொல்கிறார்.

"வேதாகம சித்ர வேலாயுதன்"

என்பது அது.

வேதம் நான்கு; சாகைகளினால் பல. ஆதலின், "அனந்தா வை வேதா;" என்ற வசனம் எழுந்தது. பாரத நாட்டில் உள்ள பழஞ்சமயங்கள் அத்தனைக்கும் மூலமாக இருப்பது வேதம். தம்தம் கொள்கைகளிலும் பழக்க வழக்கங்களிலும் வேறுபாடு உடையவர்களாக இருந்தாலும் யாவரும் வேதத்தையே பிரமாணமாகக் கொள்வர்.

தீவினையை மாற்றும் திருவாய் மொழியோதி,
ஆவி உருக, அருள்புரிந்தால் ஆகாதோ ?

பாரத நாட்டுப் பழஞ் சமயத்துக்கு ஒருபேரும் இல்லை என்று பலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஹிந்துமதம் என்று இன்று நாம் குறிப்பது பழைய சமயமே அல்ல என்று சிலர் வாதிப்பார்கள். இல்லை, இல்லை; சநாதனதர்மம் என்று இதற்குப் பெயர் என்று சிலர் பேசுவார்கள். ஹிந்துமத மென்னும்பெயர் பழையதன்று. அதுமேல் நாட்டினர் வைத்தது. மேல் நாட்டிலிருந்து வந்தவர்கள் முதலில் ஸிந்து நதியைக் கண்டார்கள். அதிலிருந்து ஸிந்துநாடு என்று முதலில் சொல்லி பிறகு ஹிந்து தேசம் என்றார்கள். இந்தியா என்பது அதிலிருந்து வந்ததுதான். பெயர்தான் புதியதேயன்றிச் சமயம் புதியதன்று. இந்தியா என்ற பெயர் உண்டான பிறகே அப்படி ஒரு நாடு உண்டாயிற்றென்று சொல்லலாமா? அவ்வண்ணமே ஹிந்து மதம் என்று மேலை நாட்டார் சொன்னபிறகே அந்தச் சமயம் தோற்றிற்றென்று கூறுதல் பொருந்தாது.

சநாதனதர்மம் என்பது இடையீடின்றி வருகிற பழைய தர்மம் என்னும் பொருளை யுடையது. அது இக்காலத்தில் உள்ள அரசியல் வாதிகள் படைத்துக் கொண்டது. நம்முடைய சமயத்தை ஹிந்துமதம் என்று சுட்டினால், பெயர் புதிதாக இருப்பதைக் கொண்டு மதமும் புதியதென்று நினைக்கக் கூடாது என்ற எண்ணத்தால், இது மிகவும் பழைய மதம் என்பதை அறிவுறுத்தச் சநாதன தர்மம் என்ற தொடரை உண்டாக்கி ஆண்டார்கள். அது பழைய பெயர் அன்று.

அப்படியானால் இதற்கு என்ன பெயர்? உட்பிரிவுகள் பலவகையாக இருந்தாலும் பொதுவாக யாவரும் வேதத்தைத் தம்முடைய ஆதாரமாகக் கொண்டிருக்கின்றனர், இந்நாட்டு மக்கள். ஆதலின் இந்தப் பிரிவுகளாகிய சமயங்களுக் கெல்லாம் பொதுவான பெயர் வைதிகமதம் என்பதே.

திருப்புகழைப் பாடித் திமிதக்கூத் தாடி,
கருப்புகழ்தான் மாயக், கடைக்கணித்தல் செய்யாயோ?

அந்த அந்தச் சமயத்தினர் பொதுவான வேதத்தோடு தம் தம் சமயச் சிறப்புக்கு ஏற்றவகையில் அமைந்த ஆகமங்களை யும் பிரமாண நூல்களாகக் கொண்டனர். வேதம் பொதுநூல் ஆகமம் சிறப்புநூல். ஒவ்வொரு சமயத்தினருக்கும் ஆகமங்கள் உண்டு. சிவாகமங்கள் இருபத்தெட்டு. வைஷ்ணவ ஆகமங் களும் தேவி ஆகமங்களும் வேறு உள்ளன. இவையாவுமே மக்களை நன்னெறியிற் செலுத்தி ஞானம் பெற வைத்து வீட்டை அடையச் செய்ய உதவுவன.

ஆகவே ஞான நெறியில் யாவருக்கும் துணையாக உதவு வன வேதமும் ஆகமங்களும். அவற்றைத் தந்து, யாவரும் பயிலும்படி வளர்த்து வருகிறவன் இறைவன். வேதாகமங் களாகிய கருவிகளைக் கொண்டு ஞானவிளையாடல் புரிகிறவன் அவன்.

முருகன் குழந்தை உருவினன். பொதுவாகக் கடவுள் செய்யும் செயல்களைத் திருவிளையாடல்கள் என்று சொல் வார்கள். தான் செய்வன விளையாடல்களே என்பதை அறியும் வண்ணம் முருகன் இளமைத் திருக்கோலம் பூண்டு விளங்கு கிறான். விளையாட்டுக் கருவிகளை வைத்துக்கொண்டு குழந்தை விளையாடுகிறது. முருகனும் வேதத்தையும் ஆகமத்தையும் வைத்துக்கொண்டு ஞான விளையாட்டை நடத்துகிறான். உயிர்க் கூட்டங்களையும் அஞ்ஞானம் அகற்றி குழந்தைமனம் உடை யவர்களாக்கி ஞான விளையாடல் செய்யச் செய்கிறான்.

விநோதம் என்பது விளையாட்டு. இறைவன் ஞான பண்டிதன். அவன் செய்வது ஞான விளையாட்டு. அல்லது ஞானவிநோதம். கலைகளில் ஈடுபட்டு அவற்றின் சுவையைத் தெரிந்து பொழுது போக்குபவர்களை அருங்கலை விநோதர்கள் என்று சொல்லுவது ஒருவழக்கு.

ஆற்றல், அறிவாண்மை, அன்பின்ப ஊற்றினர்
ஆற்றும் பணியில், அடியனை ஒன் றுக்குதியோ ?

" அருங்கலை விநோதன், அமராபரணன் "

என்று சீயங்கன் என்னும் அரசனை நன்னூற் சிறப்புப் பாயிரம் பேசுகின்றது.

இங்கே முருகன் ஞான நூல்களைப் படைத்து மெருகிட்டு, மற்றவர்களும் ஞானம் பெறும்படி ஞானவிளையாட்டை விளையாடுகிறுன். ஆதலால் அவனை ஞான விநோதன் என்று அழைப்பது பொருத்தம். வேதத்தையும் ஆகமத்தையும் விளையாட்டுக் கருவியாக் கொண்டு அவன் இந்த அற்புத விளையாட்டை விளையாடுகிறுன். அந்தக் கருவிகளின் பின்னே மறைவாக நின்று கூடச் சிலருக்குவிளையாட்டுக் காட்டுகிறுன். ஆதலின் அருணகிரியார் அவனை,

வேதாகம ஞான விநோத !

என்று போற்றுகிருர்.

இவற்றைக் கொண்டு அவன் விளையாடினுலும் அவன் நுட்பமானவன். பொறிபுலன்களுக்கு எட்டாதவன். நம்மிடம் உள்ள பொறிகளுக்குத் தட்டுப்படாதவற்றை மனம் நினைந்து பார்க்கும் ஆற்றலுடையது; அது நுட்பமானது. ஆனுல் இறைவனை அது அணுக முடியாது. அவன் மனத்துக்கு அப்பால் இருப்பவன். மனம் உள்ள இடத்துக்கு அப்பால் என்று பொருள் கொள்ளக் கூடாது. மனத்தினூடே இருந்தும் அதனுல் அறியப் படாத நுட்பமாய் இருக்கிறுன். அதனுல்,

மனோதீதா

என்ருர். மனத்துக்கு அதீதனுனவனே என்பது பொருள். அதீதம் - எட்டாதது; அப்பாற்பட்டது.

மனத்துக்கு அதீதனுக இருந்தாலும் அவன் இறங்கி வந்து அருள் செய்ய வேண்டுமென்று எண்ணினுல் அடியார்கள் காண வருவான். அதற்கு ஏற்ற கோலம் கொள்வான். தேவ லோகத்திலுள்ள தேவர்களைப் பாதுகாக்க, அவன் தேவசேனு

கூற்றும் அணுகா; குறையில் குமரனடி
போற்று; அடியரடி புந்திகொள் என்மனனே.

பதியாக எழுந்தருளினான். அவனுடைய பெருவீரம் காரண மாக அமரர்கள் சூரனுடைய தொல்லைகளினின்றும் நீங்கினார் கள். சூரனோடு போர்புரிந்து வெற்றி காண்பதற்கு முன்பே அமரர்களுக்கு முருகனுடைய பெருமை ஓரளவு தெரியும். அசுரேந்திரனுக்குமுன் தம்முடைய வலிமை பயனின்றி ஒழிவதைக் கண்டபோது அவர்களுக்குத் தம்முடைய பலவீனம் தெரிந்தது; அப்பால் சூரனை முருகன் வென்றபோது அப் பெருமானுடைய இணையற்ற பேராற்றலை உணர்ந்து கொண் டார்கள். அவன் தமக்குச் சேனாதிபதி யானாலும் தலைவன் என்பதை உணர்ந்தார்கள்.

பாரத நாட்டின் தலைவராக இருப்பவர் ராஷ்டிரபதி; அவரே படைகளுக்கெல்லாம் மேலான தலைவராகவும் இருக் கிறார். இதுபோலவே தேவர்களுடைய படைக்குத் தலைவனாக இருக்கும் முருகன் அவர்களுடைய தனிநாயகனாக இருக்கிறான். அவர்களுடைய வணக்கத்தை ஏற்று அவர்களுக்கு முடி மணியைப் போலத் திகழ்கிறான்.

அசுரேந்திரன் ஆணை நடந்த நாளில் இந்திரன் அரச பதவியை இழந்தான்; முடியை இழந்தான். அப்படியே ஒவ் வொரு தேவரும் தத்தமக்குரிய அதிகாரத்தை இழந்தனர்; முடியிழந்து தலைதாழ்ந்து நின்றனர். முருகன் திருவருளால் சூரன் அழிந்தவுடன் யாவரும் தலை நிமிர்ந்தனர். அவரவர்கள் தங்கள் தங்கள் அதிகாரத்தை மீண்டும் பெற்றனர். தங்கள் முடியை அணிந்து கொண்டனர். அந்த முடியை இறைவன் திருவடியில் வைத்துப் பெற்றனர். தம் தலைமேல் அவன அடியைப் புனைந்தனர். இதனால் முருகன் அவர்கள் முடிமேல் மணியாகத் திகழ்கிறான். தேவலோகத்தினருக்கே அவன் முடி மணி. இதைச் சொல்லுகிறார்.

சுரலோக சிகாமணியே!

இன்பச் சிவகுமரன், என்றும் நம் உள்ளத்தில்
ஒன்றி யிருக்கும், உயர்பேறு என்றேயோ?

'ஆதாரமில்லாத அடியேனுக்கு அருள் பெறும்படி வழி செய்யவேண்டும்' என்று வேண்டிக் கொள்ளும் அருணகிரியார், 'இது நினக்குப் பெரிய காரியம் அன்றே; நீ எதையும் விளையாட்டாகவே எளிதில் நடத்தி விடுபவன் ஆயிற்றே' என்றார். "நீயே எண்ணி, இன்னது செய்ய வேண்டுமென்று அறிந்து அதனைப் பெறலாமே! என்று அவன் சொன்னால், நீ நான எண்ணித் தட்டுப்படுகிறவன் அல்லவே! மனோதீதன் அல்லவா? நான் நினைந்தால் நடக்குமா?' என்றார். 'நான் உயர் நிலையிலிருந்து கீழே இறங்கி வந்து உன்னை ஆள்வது என் பெருமைக்குத் தாழ்வு' என்று முருகன் சொல்கிறான். 'நீ தேவர்களுக்கு ஏவல் செய்பவனைப்போலச் சேனாபதியாகி வந்து நலம் செய்தாய்; அதனால் உன் நிலை தாழவில்லை; நீ சுரலோக சிகாமணியாக நிற்கிறாய். எனக்கு அருள் புரிந்தால் உன்நிலை தாழாது. அது பின்னும் உயரும். கருணையில் இணையற்றவன் என்ற புகழ் கிடைக்கும் என்று கூறினார்.

இறைவன் திருவுள்ளம் கொண்டு நம்மை ஈடேற்றினால் அவன் அருளை நாம் பெறலாம் என்பது கருத்து.

ஆதா ரம்இலேன் அருளைப் பெறவே
நீதான் ஒருசற் றும்நினைந் திலையே!
வேதா கமஞா னவிநோத! மனோ
தீதா! சுரலோ கசிகா மணியே!

[வேதங்களையும் ஆகமங்களையும் கொண்டு ஞானத் திருவிளையாடல் செய்யும் பெருமானே, மனத்தால் அறியப் படாத நிலையில் உள்ளவனே, தேவலோகத்திலுள்ள தேவர்கள் தம் முடிமணியாக வைத்து வணங்கும் இறைவனே, எந்தவகை யான ஆதாரமும் இல்லாத அடியேன நின் திருவருளைப் பெறும்படியாக நீ சிறிதளவாவது திருவுள்ளம் கொளவில்லையே.

ஆதாரம் - பற்றுக்கோடு. விநோதம் - விளையாட்டு. மனோ தீதம் - மனத்துக்கு அதீதம். சுரலோகம் - தேவலோகம்; இங்கே தேவர்களுக்கு ஆயிற்று. சிகாமணி-தலையில் வைத்துக்கொள் ளும் மணி.] இது கந்தர் அநுபூதியில் 26-வது பாட்டு.

தவவழியில் தெய்வத் தநயர்கள்

(ரபைதி)

வடநாட்டில் ஆபேகாம் என்று ஒரு நகர். அந்த நகரில் கோவிந்தர் என்ற ஒரு அந்தணர். அவர் துணைவி பெயர் நிருபி . செல்வம் நிறைந்த அத்தம்பதிகள், சாஸ்திர விசாரணை, திருநீற்றுக் கோலம், தியான சமாதி மூன்றிலும் முழுகி எழுந்தவர்கள். அவர்களது புண்ணியத்தின் பயனுகப் பிறந்தது ஒரு பிள்ளை. விடோபா என்று பெயர். தாய் நிறையில் உருவாகி, தந்தை படிப்பிணையில் வளர்ந்த தனயர்க்கு, வாழ்விக்கும் மணப்பருவம் வந்தது. அது குறித்துப் பெற்றோர்கள் ஆலோசிக்க லாயினர்.

எனக்கா? திருமணமா? இதற்குள்ளாகவா? அப்பா! வில்லி விருந்து புறப்பட்ட கணைகள்போல், கால தத்துவம் விரைகிறது. தல தரிசனம், அங்குள ஜலபரிசனம், தவசிகளின் ஆசி, பரமன் அருட்குப் பாத்திரம் ஆக்கும் சாதனை முதலியன நிறைவு பெற்றபின், திருவருட் சம்மதம் இருந்தால் திருமணம் செய்து கொள்ளலாம். ஆத்ம சக்தியைப் பெருக்கிக் கொள்ளுமுன், காளைப் பருவத்தை மட்டும் கொண்டு கல்யாணத்தைச் செய்து விட்டால், தேகசக்தி தேயும்; ஆத்ம சக்தி யழியும்; தெய்வசக்தி மறையும் என்றுர் மைந்தர்.

நிருபீ! உத்தமியான உன் மகனது உயர்ந்த நோக்கம் புரிகிறதா?

ஸ்வாமி! தங்கள் தவசீலம், தனயனிடம் பரிணமிக்கிறது என்றுள் நிருபி.

விடோபா! சிந்தனையை செயலாக்கும்போது, மோசமான சோதனைகள் மோதலாம். எச்சரிக்கிறேன். நின் நினைவை இறைவன் நிறைவேற்றுவானுக! என்றுர் தந்தை.

அன்பு செழிக்கும், அருள் கொழிக்கும், வாய்மைகொள்
இன்ப மனையறத்தில், என்னுமிது கண்டாமே!

தாயும் ஆசி செய்தாள். இவர்கட்குப் பிள்ளையாய்ப் பிறக்க என்ன தவம் செய்தேனோ என்று, புனித பெற்றோர்களை வணங்கிப் புறப்பட்டார் புதல்வர்.

* * * *

நதிகள் பலவற்றில் மூழ்கினார். தலங்கள் பலவற்றைத் தரிசித்தார்.

அலங்காவதி என்றொரு அரும்பதி. அவ்வூரில் ஒரு விஷ்ணுபக்தர். அவர் பெயர் சீதோபந்து. யாத்ரிகரை உபசரிப்பதில் அவர்க்கு அதிக ஆர்வம். அப்பதிக்கு வந்த விடோபாவை, அவர் கண்டார். பிரமசாரியின் பிரமதேஜஸ், சீதோபந்துவின் சிந்தையை வசீகரித்தது. அவரைத் தன் திருமாளிகைக்கு வருந்தி அழைத்தார். பயனுன உபசாரம் பல செய்தார்.

அன்று இரவு, அமைதித் துயிலில் உலக முழுதும் ஆழ்ந்துளது. சீதோபந்து ஒரு கனவு கண்டார். எதிரில் நாரனர். சங்குசக்ர தாரணர். பவளவாய் திறந்து, சீதோபந்து ! மகான் விடோபாவிற்கு உன் மகளை மணமுடித்து வை ! என்றார். கனவு கலைந்தது. விழித்தார் பக்தர். வியர்த்தது மேனி. எழுந்தார்.

பக்கத்தில் படுத்திருக்கும் விடோபாவைப் பார்த்தார். அவரும் விழித்துக் கொண்டுதான் இருக்கிறார்.

அவரிடம் அவரது குலம் கோத்திரங்களை வினவியறிந்தார். எல்லாம் பொருத்தம்! சமயம் சைவம். இருந்தால் என்ன ? எம்பிரான் தீர்ப்பிற்கு மாறுபாடு ஏது என்று, எண்ணியது அவரது புண்ணிய மனம்.

ஒரு முடிவிற்கு வந்தார். அவரிடம், கனவுச் செய்தியை அறிவித்தார். விடோபா வாய் திறக்கவில்லை.

ஊக்கமொடு பக்தி யுற்றிருக்கும் நல்லோர்தம்
நோக்கம் பட்டாலும், நொடித்துவிடும் கன்மமரோ.

அடியேன் தங்கள் கருத்தை அறியலாமா? என்று மேலும் மேலும் வினவினார்.

தொந்தபந்தம், தொல்லை யானது; அவ்வளவுதான் என்றார் விடோபா.

ஆண்டவன் அறிவிப்பைத் தெரிவித்தேன். என்மேல் பிழையில்லை; மற்றவை யீஸ்வர சித்தம் என்று சாந்தி யடைந்தார் சீதோபந்து.

விடோபா! தர்ம சூட்சுமம் அறிந்தவர்கள்தான் தம்பதிகளாக வேண்டும். மணந்தபின், தெய்வத் திருவுளம் அறியத் தியானிக்க வேண்டும்; அறிவிப்பின்படி வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும்; அதைத் திருமணச் சடங்குகள் அறிவிக்கின்றன. மறுப்பது மரபல்ல. கட்டளைப்படி இதே நேரத்தில் கல்யாணம் செய்து கொள்! என்று, அதிர எழுந்தது அசரீரி.

அதைக் கேட்ட விடோபா மனம் அஞ்சியது. சீதோபந்து மனம் உவந்தது. திருமணம் நடந்தது. பரமபக்தர் இவரை மணக்க, என்ன தவம் செய்தேனோ என்று ருக்குமாபாய் உள்ளம் உருகியது.

* * * *

பாதி யாத்திரைதான் முடிந்தது. மற்றைய பாதியையும் முடித்தபின்தான், சாந்தி முகூர்த்தம் என்றார் விடோபா.

மகளும் மனைவியும் தொடர, யானும் வருகிறேன் என்றார் மாமனார். மறுநாளே யாத்திரை ஆரம்ப மாயிற்று.

பண்டரிபுரம், அகோபிலம், திருவேங்கடம், தென்கயிலாயம், தணிகை, சிதம்பரம், மதுரை, இராமேஸ்வரம், கதிர்காமம் முதலிய தலங்கள் பலவும் தரிசித்தனர். இறுதியில் ஆபேகாம் அடைந்தனர்.

வண்மை, நிறைகல்வி, வாய்மை, யறமிகுத்த
ஒண்மையினார் வாழ்வு, உயர்ந்தோங்கல் கண்டாமே.

சன்னியாசியான ஜாதகனே, சம்சாரி யாக்கிய சிதோபந்து குடும்பத்தைக் கோவிந்த தம்பதிகள் சிறவில்லை. வாயார் மகிழ்ந்து வாழ்த்தினர். பெற்றோரிடம் பிள்ளையை ஒப்படைத்த மகிழ்வுடன், பெண் வீட்டார் திரும்பினர்.

* * * *

ருக்மாபாய், மாமன் மாமிக்கும், கணவர்க்கும் சேவை செய்வதில் கண்ணும் கருத்தும் ஆயினள். பாவையை மட்டும் விடோபா பரிசித்திலர். அவர் உணர்வு, எப்போது சிவசிவ என்று இருந்தது.

ஈஸ்வர சித்தம்போல் ஆகட்டும் என்று இருந்த கோவிந்த தம்பதிகளும், இது குறித்து வாய்திறந்திலர். ஒரு நாள், அவ்விருவரும் யோகசமாதி கூடினர். அதன்மூலம் தேக வியோக மாயினர்.

ஊர் அழுதது; உறவு அழுதது. மருகி யழுதாள். மைந்தர் மட்டும், இது இயற்கை என்று ஆறிமனம் தேறினர். சம்பிரதாயத்தை நினைத்தார், இறுதிவரை சடங்கை நடத்தினார்.

* * * *

ருகமாபாய்! அவரவர் செல்வம் அவரவர் முயல்வில் வந்தவை. அதன் பயனே அவரவர்களே அனுபவிக்க வேண்டும். புண்ணிய உருவில் பயன பொஙகி வரும். என் பெற்றோர் செல்வததை, உனக்கு வேண்டும் அளவு எடுத்துக கொள்! மற்றவைகளை, என் தந்தை தாயர் பெயரால தானம் செய்து விடு என்றார்.

அப்படியே என்று சென்ற ருக்மாபாய், அதிவிரைவில் திரும்பினள்.

ஸ்வாமி! என்மேல் இருந்த நகைகளும், இந்தக் குடும்பத்தின் சொத்து. ஆதலின மாமா மாமியர் சொத்துகளுடன்,

---

சிவன்முத்தர், சித்தர்தாம், சிந்தித்துச் செய்திட்ட
தேவநூல காட்டுகின்ற தெய்வவழி செல்வோமே,

அவைகளையும் தானம்செய்துவிட்டேன். என் சொத்து தாங்கள். அதன் அடையாளம், இத்தாலி என்று அறிவித்தாள்.

விடோபா அது கேட்டு வியந்தார். சரி. காசியில் தாய் தந்தையர் அஸ்தியை கரைக்கப் போகிறேன். உன்னை உன் தாய் வீட்டில் விட்டுப் போகிறேன் வா என்றார். துணைவி சரி யென்று தொடர்ந்தாள்.

அலங்காவதியை அடைந்ததும், இனி உனக்கு வழி தெரியும். வீட்டிற்குப்போ என்றார். அடியாளும் வருகிறேனே என்றாள் ருக்மாபாய்.

கேள்! நீ என் துணைவி. என் கட்டளையை மீறுவது கற்பிற்குப் பழுது என்று கடுகடுத்தார். விரைநது பிரிந்தார்.

கண்கலங்கிய ருக்மாபாய், தாய்வீடு சேர்ந்தாள். பெற்றோர் களிடம், நடந்தது கூறினாள். குமுறி அழுதாள்.

அம்மா! துறவு மனத் தம்பதிகட்குத் துறவு மகனே தோன்றி யிருக்கிறான். அவனையே நீ மணக்க வேண்டும் என்பது, ஆண்டவன் கட்டளை. நாம் வைஷ்ணவர்கள் என்று பாராதே! கௌரி விரதத்தை மேற்கொள்! இவ்விரத சீலத் தால், சாவித்திரி சத்தியவானை மீட்டனள். அவ்விரதம் அனுட்டிக்கும் முறை இது என்று, அறிவித்தார் சீதோபந்து. ருக்மாபாய், தந்தை கற்பித்த விரதத்தில், அழுந்தி யிருந்து நாள்தோறும் உமாதேவியை ஆராதிக்க லாயினாள்.

* * * *

காசிக்குச் சென்ற விடோபா, கங்கையில் அஸ்திகளைக் கரைததார். அமல விஸ்வநாதரை ஆராதித்தார்.

ஸ்ரீபாதர் என்ற ஒரு மாபெரும் தபஸ்வியைக், காசியில் தரிசித்தார். அவர் தப தேஜஸ், இவரை வசீகரித்தது.

அபயம் பிரபோ என்று, அவரடியில் விழுந்தார். ஸ்வாமி! பொறிகள் எனும் ஐந்து பொல்லாத பாம்புகள்; குமைக்கும்

கறபுக் கனல்வீசும் காரிகையர் வாழ்வதனால்,
அற்பமாம் இவ்வுலகிற்(கு) ஆயுள்நீ டிக்கிறதே.

எண்ணங்களான குரங்குகள்; அகங்கார யானைகள்; அபிமானமாகிய முள்ளம் பன்றிகள்; இச்சையாம் ஓநாய்கள் நிறைந்த ஆக்கை எனும் காட்டிருளில் அகப்பட்டுக் கொண்டேன்; அஞ்சினேன்; தங்களிடம் அடைக்கலம் ஆகின்றேன்; கலங்கும் என்னைக் காத்தருளும் என்று கதறினர்.

உன்பெயர் யாது? உறவினர் உளரா? இராஜவசியம், யக்ஞசித்தி, அஜபா மந்திர அதிரகஸ்யம் இவைகளில் உனக்கு எது தேவை?

ஞான போத நாத ஸ்வாமி! இதுவரை மாதர் தொடர்பு இல்லை. தங்களைத் தவிர வேறு எந்த உறவும் இல்லை. எந்த சித்தியும் வேண்டா. சீவன் சிவமாக வேண்டும். இதுபோதும் அடியேனுக்கு. உயர்ந்த அதையே உபதேசியுங்கள்!

விடோபா! தேகாபிமானத்தை விடு! தாவும் இச்சையைத் தடு! பசித்தபோது புசி! மனநினைவுகளை மாயச்செய்! மானாபிமானங்களை மறந்துவிடு! ஏகபரத்தில் நீ! உன்னில் அந்த ஏகபரம்; இந்த நினைவு மயமாயிரு! என்று ஆசிசெய்தார். அதனுடன் அவரது அருணோக்கும், அருள்வாக்கும், அருள் நினைவும், விடோபாவை, அரிய தியான சமாதியில் ஆழ்த்தின.

* * * *

மாதவா! கேசவா! மதுசூதனா! அவல நிலைக்கு என் மகனை ஆளாக்கினையே! இது முறையா? தயாநிதியே! இது தருமமா? சாரங்கபாணீ! இது சரி தானா என்று, சீதோபந்து இங்கு தம் துணைவியுடன், கோபாலன் சந்நிதியில் கண்ணீரைக் கொட்டுகிறார்.

அவர் மாளிகைத் தோட்டத்தில் அம்பிகையை ஆராதிக்கும் ருக்மாபாய், அபயாம்பிகே! பிரியமான பதியை, அடியேன் பிரிந்திருக்கத்தான் வேண்டுமா? அதுதான் உன் திருவுளமா

எல்லை யிலாக்கலைகள், எங்கும் ஒளிபரப்பி,
பொல்லார்க்கும், வாழ்வுவளம் பொங்கச்செய் கின்றதுவே.

என்று, விம்மிய நிலையில் நாள்தோறும் விண்ணப்பிக்க லாயினள்.

இந்த இருவர் கதறலும், அசையாத ஸ்ரீபாதர் தவத்தை அசைத்தது. அதிர்கிறது அவர் இதயம். என்ன இது? என் மனம் குழம்புவது ஏன்? என்று அதிசயித்த ஸ்ரீபாதர், அப்போதே சஞ்சார சமாதியில் ஆழ்ந்தார். அந்தச் சமாதி இலட்சணம், அவர் திருமேனியை இழுத்தது; ருக்மாபாயின் திருமுன் கொணர்ந்து நிறுத்தியது.

சிவம்போல் நேர் நிற்கும் ஜடாதரரை, அரிவை அறிந்தாள். அடியற்ற மரம்போல் அவர் திருவடிகளில் விழுந்தாள்.

அம்மா ! என்ன வேண்டும் உனக்கு ?

ஸ்வாமி ! இயலுமேல், பேரறிவுடைய பிள்ளைகள், எனக்குப் பிறக்கும் வரம் அருளும்.

திரிமூர்த்திகளின் அமிசம்; ஆதி சத்தியின் அம்சங்கள், பெண்ணும் ஆணுமாகி உன்னிடம் பிறக்கும் என்றார் ஸ்ரீபாதர்.

திடுக்கிட்டாள் ருக்மாபாய். ஸ்வாமி ! ஆத்திரத்தால் அறிவிழந்து கேட்டு விட்டேன் : தாங்களும் அவசரப்பட்டு வரத்தை அளித்து விட்டீர்களே ! என் கணவர் சன்யாசி; அவர் மீட்டும் சம்சாரியாக முடியுமா ?

அம்மா ! 1000-ம் பேர்க்கு சீடர் ஆகலாம்; ஒருவர்க்குக் குருவாக முடியாது. ஏழுலகங்களை எரிப்பதும், ஒருவனது அஞ்ஞான அழுக்குப் படிந்த ஏழுவகைப் பிறவிகளை மாற்றுவதும் ஒன்றுதான். ஏழு பட்டணங்களை எரிப்பதால் வரும் பாவத்தை விலக்குவது சுலபம்; பல பிறப்பிற்கு வித்தான ஒருமாணவனது சஞ்சிதத்தைச் சாம்பராக்குவது, அவ்வளவு சுலபம் அல்ல. தன் தவப்பயன் முழுதையும் தாரை வார்த்தா லொழிய, சிறந்த சீடன் என ஒருவனைத் தேர்ந்து கொள்ளல் இயலாது. அரிய இந்த நுட்பம் அறியாதார், எனக்கு ஆயிரம் சீடர் என்று அக

மர்க்கடம்போல், சேட்டை மலிகின்ற இவ்வுலகத்
துர்க்கடங்கள் சாய்ந்து, துயர்தவிர்த லாகாதோ ?

மகிழ்வர். சம்சாரியான உன் கணவனை சந்யாசி யாக்கியது சாது, குற்றவாளி தான். யாரம்மா அந்தக் குரு !

ஸ்வாமி ! அவர் பெயரை அடியாள் அறியேனே !

உன் கணவன் எங்கே இருக்கிறன்.

காசியில் இருக்கிறதாகக் கேள்வி.

அப்படியா ! அவன் பெயர் கூற முடியுமா ?

வாயால் சொல்லக் கூசிய வனிதை, கண்ணீ ரொழுகத் தரையில் எழுதிக் காட்டினள்.

என்ன விடோபாவா? அட துரோகி! எவர் உறவும் இல்லை என்ருனே !

அவர் கோபத்தை அறிந்த ருக்மாபாய், அஞ்சினள்; ஸ்வாமி ! வேண்டாம் மணம் என்ற அவரை, என் மனந்தான் விரும்பியது. கனவில் திருமால் கட்டளையும் இட்டார். மணந்த நாள் முதல், என்னை அவர் மனத்தாலும் தொட்டறியார். ஆயினும், அவரை என் உள்ளம், அநவரதமும் ஆராதித்த படியே இருக்கிறது.

ஸ்ரீபாதர் யோசித்தார். அடுத்து அரிய தியானத்தில் ஆழ்ந்தார். தர்மத்தை மறந்து உலகம் தடுமாறுகிறது. சமய சின்னம் தரிப்பதன்றி, மக்கள் சமய நுட்பங்களை மறந்தனர். குல வுயர்வு பேசுவதன்றி, குலத்தின் கொள்கையை அயர்ந்தனர். பாஷையில் அடிப்படையான அனபில்லை; ஆயினும் எம் பாஷையே ஏற்றம் என்று கொள்ளித் தேள்போல் குதிக்கின்ருர். எல்லாம் போலி நாடகம். இதய உறவு இறந்தது. உதட்டு உறவு, களுக்கென்று சிரித்துக் கண் சிமிட்டுகின்றது.

இப்படித் தட்டுத் தடுமாறிய உலகை, உய்யக் கொள்ள எண்ணியது தெய்வம். அதன் சங்கற்பப்படி, வசிட்டரே விடோபா; அருந்ததியே ருக்மாபாய். புனித இவர்கள் வயிற்றில், திரிமூர்த்திகளின் அமிசம் வந்து அவதரிக்கப் போகிறது

அஞ்சுபுலன் அஞ்சி, அணிபக்தி விஸ்வாசக்
கொஞ்சுகுரல் அன்பர், குறிப்பறிந்து வாழேமோ?

என்று அறிந்தார். நிஷ்டை கலைந்தது. வியந்தார். தவசக்தியால் மறைந்தார். அடுத்து காசியை அடைந்தார்.

விடோபா! மகாபதிவிரதை உன் மனைவி. அதை என்னிடம் நீ மறைத்தாய். பத்தினி அவள் சித்தம் கலங்கில், நாடும் நகரும் நாசமாய்விடும். இனி அப் புனிதையுடன் வாழ்ந்திரு! என்று, அழைத்து வந்தார். ருக்மாவுடன் இணைத்தார். வருகிறேன் என்று மறைந்தார்.

குரு மொழியை மீற முடியுமா? ருக்குமாபாயும் விடோபாவும், சீதோபந்துவின் மாளிகையில் நல்லற இல்லறத்தை நடத்தினர்.

சந்யாசி யானான். மேலும் சைவன். கண்ட இடத்தில் உணவுண்டு கடையன ஆயினன். ஆசார ஈனனை அழைக்கலாமா? அவனை மீட்டும் சம்சாரி யாக்கியது சாஸ்திர விரோதம் என்று ஆரவாரித்தனர், ஸ்ரீவைஷ்ணவ உறவினர்.

அதை விடோபா அறிந்தார். குரோதக் குரலில் வைதிகர்கள் கொக்கரிக்கின்றனர். ஜனவாசம் வேண்டா; இனி நாங்கள் வனவாசிகளே ஆகிறோம் என்று, அடுத்துள்ள காட்டில் ஆஸ்ரமம் அமைத்தார். அதில் துணைவியுடன வாழ்ந்தார்.

பிறந்தது ஒரு பிள்ளை; அடுத்தடுத்து வேறு இருமைந்தர்கள் பிறந்தனர். இறுதியில் ஒரு பெண் குழந்தையும் பிறந்தது. மக்கள் முறையே வளர்ந்தனர். மக்கள் பிறந்து மொழிபயின்ற காலம் முதல், உரிய உபதேச சொற்களே அவர் வாய்களில் உருவாயின.

சலனமற்ற மோனமே நலம்: மற்றவை யாவும் சாகஸம் என்றார், முதல் பிள்ளை நிவர்த்தி சாது.

ஞானமே பிரதானம்: அதுவே ஆத்ம சொத்து என்றார் அடுத்துப் பிறந்த ஞான தேவர்.

நஞ்சுண் மயக்கம்செய் நானிலத்தைத தாமமறந்த
நெஞ்சினர் நல்உள்ளம், நின்கோயில் ஆயதுவே

இளமையில் கல் ; கற்ற வழிநில் ! என்கிருர் மூன்ருவது பிள்ளை சோபான் தேவ்.

மோன ஞானமே முத்திக்கு ஏது. பெண்களே ! அதையே பாடுவோம் ; கும்மியடித்து ஆடுவோம்! வாருங்கள் என்ருள், அடுத்துப் பிறந்த ருக்தாபாய்.

மக்களைக் கண்டும், அவர் மழலையில் வரும் மாபெரும் உண்மைகளைக் கேட்டும், மகிழ்ந்தது தாயின் மனம்.

பிள்ளைகள் மேல், விடோபாவிற்கு வரவரப் பிரியம் வளர்ந்தது. இப்பாசம் எங்குக் கொண்டு போய் விடுமோ நம்மை என்று, அஞ்சியது அவர்மனம்.

ருக்மாபாய் ! பிள்ளைகள் நால்வரையும் பாட்டன் பாட்டியிடம் விட்டுவா என்ருர்.

மறுக்க அஞ்சிய துணைவி, அப்படியே செய்து திரும்பினள். வந்தவள், தவ சக்தியால் தனனை மறைத்துக் கொண்ட கணவரைக் கண்டிலள். புண்ணிய புருடா! பூத தயாளா; என் உயிரே! எங்கே இருக்கிறீர் என்று, காடு அதிரக் கதறினள்.

தாய வீட்டில் விட்டு வந்த பிள்ளைகள், ஒருவர்பின் ஒருவராய்க் காட்டிற்கு ஓடி வரத் தொடங்கினர். சீதோபந்துவும், அவர் துணைவியும், பேரர்களைப பிடிக்கத் பின் தொடர்ந்து விரைநதனர்.

அம்மா ! அப்பா ! என்று, பிள்ளைகள் அலறி வருகிருர்கள். அன்னம் ஊட்டிய அம்மா ! சொன்னமே என்று முத்தாடுவையே ! அபபாவைத் தேடியா வந்து விட்டாய் ? எங்கே அம்மா அந்த அப்பா ? என்று முக்தாபாய் அலறுகிருள்.

மக்களாசை இறந்து, மனைவி பற்றைத துறந்து, மனத்தில் தெளிவு பிறந்து, மனே விருத்தி குறைந்து, மாபெரும் புலன்களை மடக்கி, ஓடும் பிராணனை ஒடுக்கி, ஒரு மறைவிடத்தில் பிரம நிஷ்டையி லிருந்த விடோபாவை, மூர்ததிகள் மூவரும் தேடிவர, ஆதி சக்தி அலற, இப்படியா ஒடுங்கி யிருப்பது ? எழு ! விழி என்று யாரே உலுப்பியதுபோல இருந்தது.

விடோபா திடுக்கிட்டு விழித்தார். மறைவிடத்தை விட்டு வெளிப்பட்டார். மனைவியும் மக்களும், அதே நேரத்தில் எதிர் வந்தனர்.

காலைப் பரிதியைக் காரிருள்கவ் வாததுபோல்,
சீலமுள ஞானிகளைத், தீவினைகள் தீண்டாவே.

நிவர்த்தி சாது உருவில் ருத்ரசாயை; ஞானதேவரில் விஷ்ணு சாயை. சோபான் தேவில் பிரமன் நிழல். முக்தாபாயில் முதல்வி சொரூபம்.

கண்ட விடோபா, தன்னை மறந்து கைகுவித்தார்.

வணங்கி எழுந்த ருக்மாபாயை, வாரித் தழுவினார். தேவீ! இத் தெய்வங்களை, லோகோபகாரமாகப் பெற்ற உன்னைப், பிரிய நினைத்தது பிழைதான். என்னை மன்னித்துவிடு என்றார்.

நிவர்த்தி சாது! உன் பரிசம் பட்டால், உயர்ந்த பேரின்பம் உண்டாகும்;

ஞானேசுரா! உன் நோக்கிலுள மோகன சக்தியே மாயா சக்திகளை மாய்த்துவிடும்!

சோபான் தேவ்! உன்னைத் தொட்டவருக்கு, விளங்காத மறைநுட்பம் யாவும் விளங்குமே!

முக்தாபாய்! உன்னை மடிமேல் வைத்தால், அட்ட சித்தியும் கைவல்யம் ஆகுமே! ஏமாந்தேன்; மறுத்து ஒதுங்கினாலும், மன்னித்து வலிந்து வந்து ஆண்ட உங்கள் அருட்கே அடைக்கல மாகின்றேன். என்ன செய்ய வேண்டும் யான்?

விஷ்ணு பஜனை செய்வோம் என்றார் நிவர்த்திசாது. அதனுடன் சிவபஜனை சேரட்டும் என்றார் ஞானதேவர். இதனால் சமய சச்சரவு சரியும். மதவிரோதம் பாராட்டுவார் வாயில் மண்விழும் என்றார் சோபான்தேவ். பெண்கள் அடக்க ஒடுக்கமாக வாழ, பல ஆடவர் முன் ஆடாதிருக்க, கணவரைத் தெய்வமென்று கருதிப் பணிபுரியுமாறு, அவர்களைக் கூட்டி அறிவுபெறச் செய்கிறேன் என்றாள் முக்தாபாய்.

அப்படியே என்று விடோபா, மக்களொடு பஜனையை ஆரம்பித்தார். வசிட்ட அமிசமும், அருந்ததி அமிசமும், ஆதிசத்தி திரிமூர்த்தி அமிசங்களும் அன்று ஆரம்பித்த பஜனை நாதம், உலகில் பலகாலம் ஒலித்தது. அதன பயனாக, வைதிக ஒழுக்கம் வளர்ந்தது. அகம் புறத் தூய்மை அமைந்தது.

தவப் பரம்பரையான தம்பதிகள் இடத்தில், தெய்வ அமிசங்கள் தநயராய் வரும்; உலக மக்களை உய்விக்கும்; இதற் கென்றே அமைந்தது இல்லறம் நல்லறம் எனும் உயர்ந்த இந்த ரகசியத்தை, உலகம் இவ்வரலாற்றின் மூலம் உணர்ந்தது.

வாழ்க ஆஸ்திக வழிமுறை

ஓம்

THE FLUTE

Brindabhan. I Scene.

Gopi: A. We are all met here for dance and play, for bajan and joy.

Gopi: B. This is Lord's garden. Krishna loves the wonderful spot. Let us dance and sing
"Krishna-Hare Krishna Hare Krishna, Hare, Krishna Hare Hare."

Gopi: X. A question to answer! Please to listen

Gopis: A B Y Etc. Yes, Yes!

Gopi: X. We all love Krishna equally. But why does Krishna love Radha more than He loves us!

Gopi: Y. I want to know why that is so. We will go to Krishna and ask Him.
Singing the Lord's name, Gopis march to the nearest Aswatha Tree where Krishna is resting *with flute in hand*.
Gopi's prostrations to Krishna.

Gopi: X. Oh Lord, why are you pensive! What troubles your mind

Lord: Radha has not come yet. I am just thinking of her,as you all were coming. It will be excsllent to have Radha also with us.

Gopi: Y Do we not love you as well as Radha! Why are you more pleased with Radha than with any of us! We adore you as God? Can God be so partial and treat us differently, one with more affection, another with less affection.

Lord: Sweet devotees! Love of God is Bakthi. You give me Bakthi. But I give you in return many times more Bakthi than what you give

Gopis: Y & Z Look here! O Krishna! we are all envious of Radha! For, you are always mad after her and ever thinking of her. Why not you love us also as Radha?

Lord: Sweet Gopis! I love all of you in the same manner; you are all rare devotees. But Radha is the rarest

Gopi: Y. Even here! look! You love Radha more than any one of us.

Lord: Every Gopi or baktha gets the same degree of love from God. But when I give you my love, you all do not receive it as I give it. So you complian, don't you?

Gopis We receive your love as you give it. But you give differently.

Lord: Look here! Radha has no time, no mind to see and observe how I give my love to any one of you. She gives of her love forgetting the world, with mind filled with me and me alone. When you receive my love, you do not think of me alone, but of good many other disturbing things. You are looking out to see how I treat other Gopis; what I give to them and what not. It is all your fault. Think of me and give me of your love, all

your love; you will all become Radhas. Then you will not see any difference in the Lord's love.

Gopis: This shows you love Radha specially and more and you do not treat us as well.

Lord: Do more Bajan! Become Radhas; my love is always with you.

Gopis: "Hare Krishna, Hare Krishna, Krishna Krishna, Hare Hare"

Gopis. II Scene

Gopi: X. I am not satisfied with Krishna's reply. Moreover, He loves the flute more than any one of us including Radha. He is always keeping it.

Gopi: Y. We shall steal the flute and break it to pieces.

Gopis: Good suggestion.
The Gopis steal the flute and break it to pieces,
Krishna meets the Gopis. Look here! the very prem of my heart. Where is my flute?

Gopis: We do not know- Let us search for it. (Krishna feigns as if he was having a bad stomach-ache and as if He was having unbearable pain).

Krishna: Get me the pada-amrit of a devotee or Baktha. That will cure me.

Gopis: How can we give the washing of our feet! We will go to hell. We cannot. We cannot.

Radha: I shall be prepared even to lose heaven and go to hell, but I am anxious to serve and give what Krishna wants. Radha washes her feet and handles to Krishna a cup of Baktha pada-amrit. Krishna is relieved.

Lord: Sweet mothers. You see the heart of Radha. How different it is from yours. In her Bakthi she is prepared to forsake the world of pleasures and is content te be thrown into a world of pains instead. Her heart which receives my love, receives it whole-sale. With your other attachments and differentiations, your heart is not able to receive my love in fullness or purity.

Gopis realised the wisdom of doing Bakthi in forgetfulness of the world and their complaints and marched to Brindabhan to start the never-ending Bajan of Narayana.

Gopis: O Lord! In our foolishness and not knowing who Thou art and what is Thy flute, we have broken it to pieces. Forgive us. Oh Lord! and bless us. Gopies put the broken pieces before the Lord—The Lord passes his eyes and compassion on them.

Lo! The pieces run into each other and become the one whole flute and the Lord takes it in His hands!

Lord: Sweet Bhakthas! Let me tell you what the flute is. It is the representation of the one sound sabda that fills the creation and controls it and ultimately absorbs it. It is Sabda Brahmam. It is all Shakthi. The world is not, if the flute is not. None, not even the Gods, can tamper with it. Divinity alone can handle it Rest of the world has to worship it and become part and parcel of it. In the Eternity of my existence, in the prema of my blessing and in the realisation of spirituality of all creation and lives, the essential spirit is the flute. The flute is myself and the breath of man and all other lives, the sabda Brahmam that makes and unmakes the world, that entity Prema Brahman is the flute in my hands. I play now the flute. Be blessed and become Myself.

Gopi: Bhajan. Hare Krishna, Hare Krishna,
Krishna Krishna, Hare Hare.

Thus the never-ending Bhajan of Hare Krishna, Hare Krishna, Hare Krshna, Hare Hare, Hare Hare, started with Devotees of Brindabhan and the world is marching from Divine Love to Realisation.

Peace be to all the World.

Thiruppugal Mani.

311

உய்யும் படிக்குன் திருக்கருணை
ஒன்றைக் கொடுத்தால், உடையாய்! பாழ்ம்
பொய்யும் அவாவும் அழுக்காறும்
புடைபட் டோடும் ; நன்னெறியாம்
மெய்யும், அறிவும், பெரும்பேறும்
விளங்கும் ; எனக்குன் அடியார்பால்
செய்யும் பணியும் கைகூடும் ;
சிந்தை துயரும் தீர்ந்திடுமே ! (தாயுமானார்)

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY,
BESANT NAGAR :: MADRAS-90.

No 1506
அசோகா
ASOKA
No.1506

Regd. No. M. 5390 Amirthavachani புரட்டாசிமீ (1962 ...)

312

Coffee
Ours for Quality

RAW ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS) PRIVATE LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்.

124, தெற்காவணி மூலவீதி :: மதுரை

Tel: "FAITH" Estd: 1924. Phone: 113

குடை மார்க் பினுயில்

(சிறந்த கிருமி நாசினி)

தயாரிப்பாளர்:

ஸ்பிரிட் வேர் ஹவுஸ்

49, சைடன் ஹாம் ரோடு
சென்னை-3. டெலிபோன்: 33982

விநியோகஸ்தர்கள்:

கார் & கம்பெனி

1/6, செகின் லேன் பீச்,
சென்னை-1. டெலிபோன்: 22051

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்:

பங்குனி மாதத்துடன் உங்கள் வருட சந்தா முடிவடைகிறபடியால், தயை கூர்ந்து சுபகிருது வருஷ சந்தாத் தொகையை அனுப்பும்படி ஞாபகப் படுத்துகிறோம். வி. பி. யில் அனுப்ப இயலவில்லை.

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1.

Printed by V. Thirunavukarasu at the Rathnam Press (Branch)
65, Tirupalli Street, Madras-1.
Edited & Published by S. Muthuswami, 8, Bunder Street, Madras-1.